வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 25.05.2024 சனிக்கிழமை இதழ் : 146 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# கண்காணிப்பு பட்டியலில் இலங்கையை சேருங்கள்!

## அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு மத சுதந்திரம் பற்றிய குழு பரிந்துரை

வாஷிங்டன், மே 25

மத சுதந்திரம் தொடர்பில் இலங்கையை விசேட கண்காணிப்பு பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு பரிந்துரை செய்துள்ளது அந்த நாட்டின் சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான ஆணைக்குழு.

அத்துடன், மத சிறுபான்மையினருக்கு எதிராக பௌத்த பிக்குகளால் தூண்டப்பட்ட ஒடுக்குமுறைகள் மற்றும் அமைதியின்மையை தடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறியிருக்கிறது என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

2023ஆம் ஆண்டில் சர்வதேச நாடுகளின் மத சுதந்திர நிலவரம் தொடர்பான 102 பக்கங்கள் கொண்ட வருடாந்த அறிக்கையை சர்வதேச மதச் சுதந்திரம் தொடர்பான அமெரிக்க ஆணைக் குழு வெளியிட்டது.

அதில், இலங்கையின் மத சுதந்திர நிலவரம் 2023இலும் தொடர்ந்து பின்னடைவை சந்தித்தது. இலங்கை அரசாங்கம் மத சிறுபான்மையினரை தொடர்ச்சியாக ஒடுக்கியும் - அச்சுறுத்தியும் வந்திருப்பதுடன், சில வேளைகளில் அவர்களின் வழிபாட்டுத் தலங்களுக்குள் பிரவேசிப்பதற்கு அவர்களுக்கு அனுமதி மறுத்துள்ளது.

தேவாலயங்களை பதிவுசெய்வதில் கிறிஸ்தவ சமூகம் சிக்கல்களுக்கு முகங்கொடுத்தது. அது மாத்திரமின்றி, மத சிறுபான்மையினரை இலக்கு வைப்பதற்கும் - கண்காணிப்பதற்கும் - தடுத்து வைப்பதற்கும் அரசாங்கம் அடக்குமுறை சட்டங்களைப் பயன்படுத்தியது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம்களை கைது செய்வதற்கும் - தடுத்து வைப்பதற்கும் பயன்படுத்தப்பட்ட பரந்துபட்ட அதிகாரங்களைக் கொண்ட பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பில் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

2023ஆம் ஆண்டு முழுவதும் பயங்கரவாதத் தடைச்சட்டம், சிவில் மற்றும் அரசியல்

11

# தேசிய மருத்துவமனையாக யாழ். போதனா தரம் உயரும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை விரைவில் தேசிய மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் வடக்கில் சிறந்த சுகாதார கட்டமைப்பை உறுதிப்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கான மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# சீரற்ற காலநிலையால் 34 ஆயிரம் பேர் பாதிப்பு

## - உயிரிழப்பு 6ஆக உயர்வு-

கொழும்பு, மே 25

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 9 ஆயிரத்து 616 குடும்பங்களை சேர்ந்த 34 ஆயிரத்து 880 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேநேரம் 6 மரணங்கள் சம்பவித்துள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

அத்துடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல்களைத்

11

# தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கான நேரம் இதுவே!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 25

நல்லிணக்கத்தை கட்டியெழுப்புதல், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், இழப்பீடுகள், உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக நாம் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இந்தப் பிரச்னைகள் அனைத்தையும் தீர்க்க இதுவே நேரம் என்று நான் நம்புகிறேன்.

- இவ்வாறு நேற்று யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வந்த

11



# யாழ்ப்பாணத்தின் ஊடகங்களுக்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ். பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்தில் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி துறை கட்டடத்தை நேற்று திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்தை

11

# உறுமய திட்டத்தின் கீழ் யாழில் 1,286 பேருக்கு காணி உறுதி



யாழ்ப்பாணம், மே 25

"உறுமய" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து 286 இலவச காணி உறுதிப் பத்திரங்கள் நேற்று ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

இந்த காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தின் 15 பிரதேச செயலகங்களை உள்ளடக்கி இந்த காணி உறுதிகள் வழங்கிவைக்கப்பட்டன. இந்த நிகழ்வில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், எம்.ஏ சுமந்திரன், வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ், யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

இதேவேளை, வடக்கு மாகாணத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் 13 ஆயிரத்து 858 இலவச காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தமிழ் பொது வேட்பாளர் எங்களின் முடிவு ஜூனில்

## நாடு கடந்த தமிழீழ அரசு அறிவிப்பு

நியூயோர்க், மே 25

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான நிலைப்பாடு தொடர்பில் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி நடைபெறும் நாடு கடந்த தமிழீழ அரசின் பாராளுமன்ற அமர்வில் முடிவு எடுக்கப்படும் என்று அந்த அமைப்பின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ்த் தேசியப் பிரச்னைக்கான எந்தவொரு தீர்வும் இன்னுமோர்

11

# 2005 தேர்தல் புறக்கணிப்புக்காக வடக்கு மக்கள் இப்போது வருந்துவர்!

## சொல்கிறார் சுமந்திரன் எம். பி.

யாழ்ப்பாணம், மே 25

2005 ஜனாதிபதித் தேர்தலை புறக்கணித்தமையை வட பகுதி மக்கள் இப்போதாவது வருத்தத்துடன் நினைவுகூருவார்கள் - இவ்வாறு கூறியுள்ளார் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கட்டடம் ஒன்றைத் திறந்து வைத்து உரையாற்றினார். இதன்போது 2005

11

உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோரும் விண்ணப்பங்களை கையாளுவதற்கென்று சில சொலிசிட்டர்கள் (சட்டத்தரணிகள்) இருக்கிறார்கள். அவர்கள் நடத்துகின்ற அந்த வழக்குகளில் வெற்றி பெற்று, அரசியல் தஞ்சக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால், அவர்களுக்கு தொடர்ந்து அதுபோன்ற வழக்குகள் கிடைக்கும் - நல்ல வருமானமும் கிடைக்கும்.

அதனால் சில சொலிசிட்டர்கள் தம்மிடம் வரும் தஞ்சக் கோரிக்கையாளர்களை விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக சில முயற்சிகளை செய்வார்கள். அதாவது, இலங்கையில் படையினர் அவர்களைக் கைது செய்து வைத்திருந்தனரெனவும் அப்படி வைத்திருந்துபோது அவர்களை சித்திரவதை செய்தனர் என்றும் பிரிட்டன் அதிகாரிகளை நம்ப வைப்பதற்காக இவர்களின் உடம்பில் படையினர் குறிவைத்ததுபோல லண்டனில் குறிவைத்து அவர் உடம்பில் பல தழும்புகளை ஏற்படுத்துவார்கள்.

இந்த விவகாரத்தில் விசேட "திறமையுள்ள" பல சொலிசிட்டர்கள் அங்கு இருக்கிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்னர், பிரிட்டனின் சனல் - 4 தொலைக் காட்சியில் ஓர் ஆவணப்படம் ஒளிபரப்பப்பட்டது. அந்த ஆவணப் படத்தில் சில இளைஞர்கள் தம்மை படையினர் துன்புறுத்தினர் என்று கூறி அதற்கான தழும்புகளைக் காட்டினார்கள். அதில், உச்சமாக ஒரு பெண் தனது முகத்தை மறைத்துக் கொண்டு தான் படையினரால் பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார் என்று அழுதுகொண்டே கூறியதையும் பார்க்க முடிந்தது.

அந்த குறித்த பெண் தனது முகத்தை மூடியிருந்தபோதிலும் அவர் யார் என்பதை - அவரின் பெயர், முகவரிகள் அந்த ஆவணப் படத்தில் தெரிவிக்கப்பட்டன.

அவர் தெரிவித்த விபரங்களை வைத்துக்கொண்டு கொக்குவிலில் உள்ள அவரின் வீட்டுக்கு சென்று வீட்டிலிருந்தவர்களை டான் ரீ. வி. ஒரு பேட்டி கண்டது. அப்போது அவரது பெற்றோர், அவர் கொழும்பிலேயே வாழ்ந்துவந்தாரெனவும் எப்போதுமே அவர் படையினரால் கைது செய்யப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தனர்.

ஆக, இதுவரை நாம் அறிந்த வரையில் படையினரால் கைதுசெய்யப்பட்டபோது தான் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டாரென எந்த ஒரு தமிழ் பெண்ணும் பொது வெளியில் கூறியதாக அறிந்திருக்கவில்லை.

அதற்காக அப்படி எதுவுமே நடக்கவில்லை என்று இந்த ஊர்க்குருவி எழுதுவதாக யாரும் வரிந்துகட்டிக் கொண்டு வந்துவிடாதீர்கள். இலங்கை படையினர் மாத்திரமல்ல, அமைதிப் படை என்று இலங்கையில் சில காலம் தரித்திருந்த இந்திய படைகளும் நமது பெண்களை மிகக் கொடுமையாக பாலியல் ரீதியிலும் சித்திரவதை செய்திருக்கின்றனர்.

தென்கொரியாவின் மே 18 நினைவு அறக்கட்டளை, மனித உரிமைகளுக்காக வழங்கி வரும் "குவாங்ஜூ" விருது இந்த ஆண்டு ஈழத்தமிழ் பெண்ணான சுகந்தினி மதியமுதன் தங்கராசுவுக்கு வழங்கப்பட்டுள்ளது என்ற செய்தியை வாசகர்கள் படித்திருப்பார்கள்.

சுகந்தினி "அமரா" அமைப்பின் மூலமாக - இலங்கையின் படைத் தரப்புகளின் அடக்குமுறை மற்றும் துன்பங்களுக்கு உள்ளான - போரால் பாதிக்கப்பட்ட பெண்களின் உரிமைகள் மற்றும் வலுவூட்டலுக்காக போராடி வருபவராவார்.

"2009 இனப் படுகொலையில் இருந்து தப்பிய அவர் இராணுத்தின் பாலியல் வன்முறைக்கு உள்ளானவர். இராணுவத்திடம் அனைத்தையும் இழந்த ஏராளமான பெண்களுக்கு தைரியம் - நம்பிக்கையின் அடையாளமாக அவர் நிற்கிறார் என்று தென்கொரிய மே 18 அறக்கட்டளை கூறியுள்ளது.

இந்த விருது வழங்கும் வைபவத்தில் உரையாற்றிய சுகந்தினி, தனக்கு படையினரால் இழைக்கப்பட்ட கொடுமைகளை பொதுவெளியில் தைரியமாகத் தெரிவித்திருந்தார்.

விருது நிகழ்வில், "தான் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு வவுனியா ஜோசப் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு பயங்கர சித்திரவதைகளை எதிர்கொண்டதை சுகந்தினி நினைவுகூர்ந்தார். இராணுவம் என்னை இடைவிடாது சித்திரவதை செய்தது. தளபதி முதல் சிப்பாய்கள் வரை என்னை தொடர்ந்து பலாத்காரம் செய்து அதிர்ச்சிக்கு உள்ளாக்கினர். மாதவிடாய் நாட்களில்கூட உடையின்றி காணப்பட்டேன். ஆடைக்காக கெஞ்சியபோது, பிரபாகரனிடம் உள்ளாடைகளை கேட்குமாறு கேலிசெய்தனர். எனக்கு இந்தக் கொடுமை இழைக்கப்பட்டபோது அதே அறையில் 11 பெண்கள் இருந்தனர். துரதிர்ஷ்டவசமாக அவர்களில் இருவர் உயிரிழந்து விட்டனர். ஏனையோர், பேசமுடியாதளவு அதிர்ச்சியடைந்திருந்தனர்." என்று அவர் தனக்கு நேர்ந்த அந்தக் கொடுமையை கூறினாரென வெளிவந்த அந்தச் செய்தி எமது கடந்த கால அவலத்துக்கு சாட்சி சொல்லியது.

அந்தத் தென்கொரிய நிறுவனம் மிகப்பொருத்தமான ஒரு பெண் ஆளுமைக்கே இந்த ஆண்டுக்கான விருதை வழங்கியிருக்கின்றது.

நேற்றைய தினம் "ஈழநாடு"வின் முதல் பக்கத்தில் வந்த அந்தச் செய்தியைப் படித்தவிட்டு தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஈ. பி. ஆர். எல். எவ். போராளியுமான தோழர் சுகு சிறீதரன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியபோது, அந்த ஜோசப் முகாமில் நடந்த கொடுமைகளை விபரித்தார். தானும் அந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது, தான் கண்ட காட்சிகளை அடுக்கிக்கொண்டே போனார்.

கைது செய்யப்படுபவர்களை எப்படியும் நடத்தலாம் என்ற சிந்தனைப் போக்கு படையினர் மத்தியில் சாதாரணமானது. இதுபோன்ற சித்திரவதைகளை படையினர், ஜே. வி. பியின் கிளர்ச்சிக்காலத்தில் அங்கும் நிகழ்த்தியிருக்கின்றனர்.

ஆக, படையினர் தாங்கள் கைது செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும் இதுபோன்ற துன்புறுத்தல்களை செய்யலாம் என்று நினைக்கின்ற அந்தப் போக்கு முற்றாக மாற்றப்பட வேண்டியது. ஆளும் தரப்புக்கு இந்த விடயத்தில் அழுத்தமாக சொல்வதற்கும் அவர்களின் மனநிலையில் மாற்றங்களை ஏற்படுத்தவதற்கும் யாராவது முயற்சி செய்யவேண்டும் என்ற சுகுவின் ஆதங்கம் நியாயமானதே.

இலங்கை படைத் தரப்பில் முழுக் கட்டமைப்பும் மாற்றியமைக்கப்பட வேண்டும். புலனாய்வுக் கட்டமைப்புகள் முழுமையாக மறுசீரமைக்கப்பட வேண்டும். அது செய்யப்படாதவரை இந்த நாட்டின்மீது உலக மனித உரிமை அமைப்புகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கும்.

ஊர்க்குருவி

# பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுத்தவர் ஜனாதிபதி!

## வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் புகழாரம்

யாழ்ப்பாணம், மே 25

சிறந்த தலைவர் ஒருவர் செயல்படக்கூடிய விதம் இதுவே. பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த நாட்டை மீட்டெடுத்த தலைவர் எமது ஜனாதிபதி என வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் மருத்துவ பயிற்சி ஆராய்ச்சிக்கான கட்டடத் தொகுதியை திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே வடக்கு ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், யாழ். பல்கலைக்கழகத்துக்கான மைல்கல் நிகழ்வாக இந்த நிகழ்வு அமைந்துள்ளது.

நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த இந்த கட்டடத் தொகுதியை விரைவில் திறந்து, பயன்பாட்டுக்கு வழங்குமாறு கடந்த மார்ச்சில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தேன். கோரிக்கையை ஏற்று, மே மாதம் கட்டடம் திறக்கப்படும் என அவர் கூறினார்.

அதன் பின்னர் ஒரு தடவை கூட இது தொடர்பில் பேசவில்லை. எனினும், வழங்கிய வாக்குறுதிக்கு அமைய ஜனாதிபதி அவர்கள் இன்றைய தினம் இந்த கட்டடத்தை திறந்து வைத்துள் ளார். இதுவே தலைமைத் துவத்துக்கான சிறந்த வெளிப்பாடு. சிறந்த தலைவர் ஒருவர் செயல்படக்கூடிய விதம் இதுவே.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த நாட்டை மீட்டெடுத்த தலைவர் எமது ஜனாதிபதி. அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு நிலவிய காலத்தில், மின்சாரமின்றி நாடு இருளுக்குள் கிடந்தபோது தலைமைத்துவத்தை பொறுப்பேற்று சவால்களை வெற்றிகொண்டார்.

பல சவால்களை தனி நபராக எதிர்கொண்டு, நாட்டை மாற்றியமைத்தார். இவ்வாறான ஜனாதிபதியின் பிரதிநிதியாக வடக்கில் ஆளுநராக சேவையாற்றுவதில் பெருமிதம் அடைகின்றேன் - என்றார். (ஐ)

## கடலில் நீராடியவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, மே 25

மட்டக்களப்பு - வாகரை - மாங்கேணி கடலில் நீராடியவர் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த 41 வயது நபரே உயிரிழந்தவராவார். (ஐ)

## போதைப்பொருள் சுற்றிவளைப்பு பெண்கள் உட்பட 407 பேர் கைது

கொழும்பு, மே 25

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் போதைப் பொருட்களுடன் 4 பெண்கள் உட்பட 407 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது,கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 29 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருட்களுக்கு அடிமையான 25 பேரை புனர்வாழ்வு நிலையததுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 63 கிராம் ஹெரோயின், 89 கிராம் ஐஸ்,108 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

## வெசாக் தோரணம் வீழ்ந்து சிலர் காயம்!

கொழும்பு, மே 25

வெசாக் பண்டிகை முன்னிட்டு கொழும்பு - திவுல பிட்டி - மரதகஹமுல பிரதேசத்தில் கட்டப்பட்டிருந்த வெசாக் தோரணமொன்று திடீரென உடைந்து வீழ்ந்துள்ளது.

இதன்போது, சிலர் காயமடைந்துள்ள நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்றும் தெரிவிக் கப்பட்டது.

கடும் மழை மற்றும் காற்றால் வெசாக் தோரணம் இவ்வாறு உடைந்து வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)



## கசிப்பு விற்பனை செய்த பெண் கைது

யாழ்ப்பாணம், மே. 25

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் மா அதிபரின் கீழ் இயங்கும் விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவின் செல்வபுரம் பகுதியில் வைத்தே அந்தப் பெண் கைது செய்யப்பட்டார்.

மதுபானசாலைகள் மூடப்பட்ட நிலையில் அந்தப் பெண் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வந்த நிலையில் அவர் கைது செய்யப்பட்டார். (ஐ)

## மான் கொம்புடன் வந்தவர் கைது



யாழ்ப்பாணம், மே. 25

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் மான்கொம்புடன் நின்ற ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மாங்குளத்திலிருந்து எடுத்து வரப்பட்ட மான் கொம்பை வேறொருவரிடம் கையளிப்பதற்காக காத்திருந்தபோது பொலிஸார் அவரை கைது செய்தனர்.

யாழ். மாவட்ட புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார். கைதானவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
25.05.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 12

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அபிவிருத்தியும் சுற்றுச்சூழலும்

அதானி நிறுவனத்துடன் இணைந்து அரசாங்கம் மன்னாரில் காற்றாலை திட்டம் ஒன்றை முன்னெத்து வருகின்றது. இந்தத் திட்டம் பொருத்தமற்றது என்றும் இதனால், மக்களின் வாழ்வு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாகவும் தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். காற்றாலை திட்டமும் கனிய மணல் அகழ்வுத் திட்டமும் முற்றிலும் வேறுபட்ட திட்டங்களாகும். ஆனால், இரண்டையும் ஒன்றுடன் ஒன்று, தொடர்புடையதான திட்டங்கள் போன்றே மக்கள் மத்தியில் அபிப்பிராயங்கள் பரப்பப்படுகின்றன. சுமந்திரனும் அவ்வாறுதான் பேசியிருக்கின்றார். கனிய மணல் அகழ்வு திட்டத்துடன் காற்றாலை திட்டத்தை தொடர்புபடுத்தும்போது, காற்றாலை திட்டத்தையும் எதிர்ப்பதற்கான காரணம் வலுப்பெறும் என்று கணிக்கின்றனரா?

அடிப்படையில் அபிவிருத்தியும் சுற்றுச் சூழலும் ஒன்றுடன் ஒன்று முரண்பாடு கொண்டவை: எப்போதுமே இரண்டும் ஒன்றாக பயணிக்கவே முடியாது. மனிதன் பயன்படுத்தும் அனைத்துமே இயற்கைக்கு எதிரானதுதான். உதாரணமாக வாகனங்களால் சூழல் தினமும் மாசடைகின்றது - அதற்காக வாகனங்களின் பயன்பாட்டை தடை செய்ய முடியுமா? அவ்வாறாயின் அனைவரும் மாட்டு வண்டியில்தான் பயணம் செய்ய வேண்டும்.

எனவே, பெரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்போது சுற்றுச் சூழல் பிரச்னைகள் எழத்தான் செய்யும். ஒப்பீட்டடிப்படையில் குறித்த அபிவிருத்தித் திட்டங்களால் சூழலுக்கு ஏற்படும் தீங்குகளை தணிப்பதற்கான பொறிமுறைகள் தொடர்பில் மட்டுமே சிந்திக்க முடியும். சூழலியல் பிரச்னைகளை அதிகம் தீங்கற்ற வகையில் தணிப்பதற்கு என்ன செயல்லாம் என்னும் அடிப்படையில்தான் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

உலகெங்கும் கைக்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்ட நடைமுறை இதுதான். ஆனால், இவ்வாறான சுற்றுச்சூழல் விடயங்களை அரசியல் இலாபம் தேடும் விடயங்களாக பயன்படுத்த எண்ணினால் அது மக்கள் மத்தியில் குழப்பங்களையே ஏற்படுத்தும். சாதாரண மக்கள் மத்தியில் அச்சங்கள் விதைக்கப்படும்போது, அவர்கள் அந்த அச்சத்தின் அடிப்படையில்தான் சிந்திப்பார்கள். சாதாரண மக்களை வழிநடத்த வேண்டியதே அரசியல்வாதிகளின் பொறுப்பாகும்.

உதாரணமாக, திருகோணமலை சம்பூரில் இந்தியாவின் ஆதரவுடன் அரசாங்கம் அனல் மின் நிலையம் நிறுவும் முயற்சியை மேற்கொண்ட போது அதனால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்தனர். அவர்களின் அச்சம் நியாயமானதாகவும் இருந்தது. ஏனெனில், அனல் மின் நிலையம் ஒப்பீட்டடிப்படையில் அதிகம் சுற்றுச் சூழலுக்கு தீங்கானது . அத்துடன், அருகாமையில் வாழும் மக்கள் அதனால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய நிலைமையும் இருந்தது. இதனை புரிந்து கொண்டு குறித்த திட்டம் கைவிடப்பட்டது. ஆனால், காற்றாலை திட்டம் முற்றிலும் மாறுபட்டது. ஒப்பீட்டடிப்படையில் சுற்றுச் சூழலுக்கு அதிக தீங்கில்லாத திட்டமாகும்.

எரிக் சொல்ஹெய்ம், பசுமை அபிவிருத்தி மற்றும் சூழலியல் மேம்பாடு தொடர்பில் உலகளவில் அறியப்பட்ட ஒருவர். அவர் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலநிலை ஆலோசகராக செயல்பட்டு வருகின்றார். தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் ஆலோசகராக தொழில்பட்டு வருகின்றார். வடக்கு மாகாணம், பசுமை அபிவிருத்திக்கு மிகவும் சிறப்பான இடம் என்று பரிந்துரைத்திருக்கும் சொல்ஹெய்ம், வடக்கு மாகாணத்துக்கு வருகைதந்து நிலைமைகளை ஆராய்ந்துமிருந்தார். எம்.ஏ. சுமந்திரன் காலநிலை ஆலோசகர் சொல்ஹெய்முடன் நட்பில் இருக்கும் ஒருவர்.

# யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட கட்டட திறப்பு விழாவுக்கு எதிர்ப்பு

## கறுப்பு கொடியுடன் போராட்டத்தில் குதித்த கல்விசாரா ஊழியர்கள்

யாழ்ப்பாணம், மே. 25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட கட்டடமொன்றை திறந்துவைப்பதற்காக வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாண பல்கலைக்கழக பிரதான வளாகம் மற்றும் மருத்துவபீட வளாகத்தில் கறுப்பு கொடிகள் கட்டப்பட்டுப் போராட்டம் நடத்தப்பட்டது.

கல்விசாரா பணியாளர்கள் சம்பள உயர்வு மற்றும் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து 02.05.2024 நண்பகல் முதல் தொடர்ச்சியாக தொழிற்சங்கப் போராட்டமானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் இன்றி சகல பல்கலைக்கழகங்களும் செயற்படாது இருக்கின்றவேளையில் எமது கோரிக்கைகளை தீர்த்துவைத்தலில் எவ்வித அக்கறையுமற்று காலங்கடத்தப்படு



கின்றதாக ஊழியர்கள் சுட்டிக்காட்டினர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் யாழ்.போதனா வைத்தியசாலையுடன் இணைந்த புதிய கட்டடத் தொகுதியானது ஜனாதிபதி ரணில், கல்வியமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு திறந்துவைக்கப்பட்டது. இதனை யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் கண்டிப்பதோடு இச்செயற்பாடு தமது தொழிற்சங்கப் போராட்டத்தை மலினப்படுத்தும் செயற்பாடாக காணப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

# இந்தோனேசியாவில் சந்திரிகாவுடன் மந்திராலோசனை நடத்திய ரணில்?

கொழும்பு, மே. 25

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையில் மந்திராலோசனை நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தோனேசியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி, அங்கு சந்திரிகாவை சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இருவருக்கும் இடையிலான சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அரசியல் மட்டத்தில் பேசப்படுகிறது.

எனினும் அங்கு பேப்பட்ட விடயம் குறித்து தகவல்கள் இரகசியாகமாக பேணப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணிலுடன், மகிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவன்ன, அனுர யாப்பா உள்ளிட்ட சுதந்திரக் கட்சியின் குழுவொன்றும் சென்றுள்ளது.

குறித்த நால்வரும் பண்டாரநாயக்க ஆதரவாளர்கள் என்ற வகையில் அண்மைக்காலம் வரை முக்கிய நபர்களாக இடம்பிடித்திருந்தனர்.

இவர்களுக்கு மேலதிகமாக ரணில் விக்கிரமசிங்கவுடன் நிமல் லான்சாவும் இந்த பயணத்தில் இணைந்துள்ளதாக தற்போது தெரியவந்துள்ளது. (அ)

# தென்மேற்கு பருவக்காற்றின் வேகம் அதிகரிப்பு

கொழும்பு, மே. 25

நாடளாவிய ரீதியில் தென்மேற்கு பருவக்காற்றின் வேகம் அதிகரிப்பதன் காரணமாக அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 தொடக்கம் 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது.

இந்த எச்சரிக்கை இன்று காலை 10.30 மணி வரை செல்லுபடியாகும் எனநேற்று காலை 10.30 மணிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும்,

வடக்கு, வடமத்திய, மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50-60 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் ஈகோ அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் போராட வேண்டி வரும்

**இடபம்**
உங்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். சக ஊழியர்களுக்கு உதவு வீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். உயரதிகாரிகள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களின் தொல்லை குறையும். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். நினைத்தது நிறைவேறும்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். உழைப்பால் உயரும் நாள்.

**கன்னி**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். உத்தியோகத்தில் சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். தைரியம் கூடும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். புது சலுகைகள் கிடைக்கும். நிம்மதியான நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் கொஞ்சம் பொறுமையை இழப்பீர்கள். சிலரின் நயவஞ்சக செயலை நினைத்து வருந்துவீர்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்றிருப்பது நல்லது. அலைச்சல் அதிகரிக்கும்

**தனுசு**
குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் நிதானம் அவசியம். பணிகளை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள்.

**மகரம்**
குடும்பத்தினருடன் மனம் விட்டு பேசுவீர்கள். பண வரவு உண்டு. வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள். இனிமையான நாள்.

**கும்பம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவுக் கிடைக்கும். மதிப்புக் கூடும் நாள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். புதியபாதை தெரியும் நாள்.

# முல்லைப்பெரியாறில் புதிய அணை கட்டும் பணியை நிறுத்த வேண்டும்!

## தமிழக முதல்வர் கேரள முதல்வருக்கு கடிதம்

சென்னை, மே 25

'தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களுக்கு இடையேயான உண்மையான தோழமை உணர்வை நிலைநிறுத்தவும் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும் வரை சிலந்தி ஆற்றின் (முல்லை பெரியாற்றின்) குறுக்கே அணை கட்டும் பணியைத் நிறுத்தி வைக்குமாறு கேரள அரசின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்த வேண்டும்' என்று கேரள முதல்வர் பினராயி விஜயனுக்கு, தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் ஸ்டாலின், கேரள முதல்வருக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

"காவிரிப் படுகையில், அமராவதி (பம்பார்) துணைப்படுகையின் ஒரு பகுதியான சிலந்தியாற்றின் குறுக்கே கேரள அரசு தடுப்பணை கட்டுவதாக சமீபத்தில் சில ஊடகங்களில் வந்த செய்திகளின் காரணமாக, அமராவதி ஆற்றில் நீர்வரத்து வெகுவாகக் குறையும் என்று தமிழக விவசாயிகளிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தப் பணியை நிறுத்தி வைக்க வேண்டும் - என்று வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# முல்லைப் பெரியாறு அணை காங்கிரஸ் கட்சி கண்டனம்!

சென்னை, மே 25

முல்லைப் பெரியாறில் அணை கட்டும் கேரள அரசின் முயற்சியை வன்மையாகக் கண்டிக்கிறோம் என்று காங்கிரஸ் கட்சி தமிழ்நாடு குழு அறிவித்துள்ளது.

காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சிலந்தி ஆற்றுக்கு குறுக்கே அணை கட்டும் கேரள அரசின் இத்தகைய முயற்சிகளை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் வன்மையாக கண்டிக்கிறேன்.

புதிய அணையை கட்டவும் பழைய அணையை இடிக்கவும் கேரள அரசு முயற்சிப்பது அப்பட்டமான சட்டவிரோத செயலாகவும் நீதிமன்ற அவமதிப்பாகவும் கருத வேண்டியிருக்கிறது.


கேரள அரசு இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவதை உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும். அதையும் மீறி தமிழக விவசாயிகளை பாதிக்கும் செயல்களில் கேரள அரசு ஈடுபடுமேயானால், உடனடியாக இதை தடுத்து நிறுத்துவதற்கு உச்ச நீதிமன்றத்தை நாடுகின்ற நடவடிக்கைகளை எடுக்கும்படி தமிழக முதல்-அமைச்சரை கேட்டுக்கொள்கிறேன் -என்றுள்ளது. (ஐ)

# கூட்டணி கட்சி என்று பாராமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## அ. தி. மு. க. கட்சி வலியுறுத்து

சென்னை, மே 25

"உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக, முல்லைப் பெரியாறு அணையை இடித்துவிட்டு புதிய அணை கட்ட அனுமதி கோரி மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ள கேரள அரசுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கிறேன். கூட்டணிக் கட்சி என்று பாராமல், கும்பகர்ண தூக்கத்திலிருந்து விழித்து, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி சட்ட நடவடிக்கை எடுக்க திமுக அரசை வலியுறுத்துகிறேன்" என்று அ. தி. மு. க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

முல்லைப் பெரியாறு பிரச்னையில் விடியா திமுக அரசின் செயலற்ற தன்மையால் மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகளும், குடிதண்ணீருக்காக நம்பி உள்ள பல மாவட்ட மக்களும் இன்றைக்கு வேதனையில் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றனர்.

இனியாவது இந்த விடியா திமுக அரசு, கூட்டணிக் கட்சி என்று பாராமல், கும்பகர்ண தூக்கத்தில் இருந்து விழித்து, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி சட்ட நடவடிக்கை எடுத்து கேரள அரசின் விஷமத்தனமான நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கவும் தமிழகத்தின் உரிமையை நிலை நாட்டவும் வலியுறுத்துகிறேன் - என்றுள்ளது. (ஐ)

# தமிழ்நாட்டில் போலி திராவிட மொடல் அரசு

## முருகன் குற்றச்சாட்டு

திருவள்ளூர், மே 25

"கோயில் பராமரிப்பின்மை, வீதிகள் மோசம் இவை எல்லாம் தான் திராவிட மொடல் அரசு. தமிழகத்தில் போலி திராவிட மொடல் அரசு நடக்கிறது" என மத்திய இணையமைச்சர் எல். முருகன் விமர்சித்துள்ளார்.

திருவள்ளூரில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2004ஆம் ஆண்டுக்கு முந்தைய தங்களின் ஆட்சிக் காலங்களில் காங்கிரஸ் நாட்டில் எந்த வித வளர்ச்சியையும் செய்யவில்லை. 70 ஆண்டுகளாக ஏழ்மையை ஒழிப்பதாக நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர் கூறி வந்துள்ளனர். ஆனால், அவர்கள் யாருமே ஏழ்மையை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆனால், பிரதமர் நரேந்திர மோடியின் ஆட்சியில் 25 கோடிக்கு மேற்பட்ட மக்கள் வறுமை கோட்டுக்கு கீழிருந்து மேலே வந்துள்ளனர் - என்றும் கூறினார். (ஐ)

# ஜெயலலிதாவின் இடத்தை பாரதிய ஜனதா நிரப்புகிறது

## அண்ணாமலை தெரிவிப்பு

புதுடில்லி, மே 25

"தமிழகத்தில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மிகச் சிறந்த இந்துத்வா தலைவராக விளங்கினார். அவருடைய இடத்தை பாரதிய ஜனதா நிரப்பி வருகிறது," என்று பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

அவர் அளித்த பேட்டி ஒன்றில், அ. தி. மு. க., பொதுச்செ [illegible] வர் ஜெயலலிதா மிகச் சிறந்த இந்துத்வா தலைவர். இந்து மதத்துக்கு அவர் நேரடியாக ஆதரவு தெரிவித்து வந்தார்.

ஜெயலலிதா இருந்தபோது, தமிழகத்தில் பாரதிய ஜனதா இருந்தாலும், இந்து மதத்தினரின் ஆதரவு அவருக்கே பெரிதும் கிடைத்து வந்தது. இந்து மதத்தின் வளர்ச்சிக்காக அவர் பல சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வந்துள்ளார்.

அயோத்தி இராமர் கோவிலுக்கு, வெளிப்படையாக ஆதரவு தெரிவித்தார். மேலும், தமிழகத்தில் மதமாற்ற தடுப்புச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்தினார்.

அவருடைய மறைவுக்குப் பின், அ. தி. மு. க. அவரின் கொள்கைகளை கைவிட்டு விட்டது. அதனால், தமிழகத்தில் உள்ள இந்துத்வா கொள்கைக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை பாரதிய ஜனதா நிரப்பி வருகிறது. இதனால் அனைத்து தரப்பு மக்களும் பாரதிய ஜனதாவை ஆதரிக்கின்றனர் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தல் ஏற்பாடுகள் தீவிரம்

## அடுத்த மாதம் அறிவிப்பு வெளியாகும்

கொழும்பு, மே. 25

**ஜனாதிபதி தேர்தலே முதலில் நடக்கும், அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன எனவும், தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் அதிகாரபூர்வமாக அறிவிக்கவுள்ளார் எனவும் அமைச்சர் மனுச நாணயக்கார அறிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

நாட்டில் என்ன தேர்தல் நடைபெறவுள்ளது என பலரும் கேள்வி எழுப்பிவருகின்றனர். முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்படும். அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஜனாதிபதித் தேர்தலை ரணில் விக்கிரமசிங்கவை வெற்றிபெற வைப்பதற்குரிய ஏற்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்துவருகின்றது.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடமாட்டார் என்ற தகவலை ஐக்கிய மக்கள் சக்தி பரப்பிவருகின்றது. ரணில் விக்கிரமசிங்கமீதான அச்சத்தாலும், தோல்வி பீதியாலுமே இவ்வாறான பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது.



ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் தேர்தலில் போட்டியிடுவார். இது தொடர்பான அறிவித்தலை அடுத்த மாதம் அவர் அதிகாரப்பூர்வமாக அறிவிப்பார். அதன்பின்னர் பலரும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவார்கள்-என்றார்.

(அ)

# பெருந்தோட்ட பகுதிகளில் உணவு பாதுகாப்பின்மை!

கொழும்பு, மே. 25

பெருந்தோட்ட பகுதிகளில் உணவு பாதுகாப்பின்மை அதிகரித்துள்ளதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டில் இலங்கையில் அதிக உணவு பாதுகாப்பின்மை வீதம் பெருந்தோட்ட பகுதிகளில் பதிவாகியுள்ளதாக உலக உணவுத் திட்டம் குறிப்பிட்டுள்ளது.

உலக உணவுத் திட்டம் தனது 2023 ஆண்டுக்கான வீட்டு உணவுப் பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை மாதிரிக் குடும்பங்களின் அடிப்படையில் வெளியிட்டுள்ளது.

கடந்த ஆண்டில் 24 வீத குடும்பங்கள் மட்டளவில் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டிருந்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதம் மார்ச் மாதத்தில் 17 வீதமாக காணப்பட்டதுடன், ஒகஸ்ட்-செப்ரெம்பர் வரையான காலப்பகுதியில் 24 வீதம் வரை அதிகரித்துள்ளது.

ஆண் தலைமைத்துவ குடும்பங்களில் 23 வீதமாகவும் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் 32 வீதமாகவும் உணவு பாதுகாப்பின்மை காணப்படுவதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

26 வீத குடும்பங்களில் போதுமானளவு உணவு எடுத்துக் கொள்ளப்ப டுவதில்லை எனவும் உலக உணவுத் திட்டம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குடும்பமொன்று அதன் மொத்த செலவில் 62 வீதத்திற்கும் மேல் உணவுக்காக செலவிடுவதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ)

# மோட்டார் சைக்கிள் ரயிலுடன் மோதியதில் மூன்று பேர் பலி!

கொழும்பு, மே. 25

காலி, புஸ்ஸ, பிந்தலிய சந்தியில் உள்ள பாதுகாப்பு கடவையில் மோட்டார் சைக்கிள் ஒன்று ரயிலுடன் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் மூன்று இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

மருதானையில் இருந்து மாத்தறை நோக்கி பயணித்த ரயிலில் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்த மூன்று இளைஞர்களும் 17 முதல் 19 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

எனினும் மூன்று பேர் பாதுகாப்பற்ற முறையில் மோட்டார் சைக்கிளில் பயணம் மேற்கொண்டுள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

குறித்த கடவையில் உரிய முறையில் சமிஞ்சை செயற்படவில்லை என நேரில் பார்த்த பொது மக்கள் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மே 26 முதல் ஜூன் முதலாம் திகதி வரை தேசிய டெங்கு தடுப்பு வாரம் பிரகடனம்

கொழும்பு, மே. 25

தேசிய டெங்கு தடுப்பு வாரம் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் ஜூன் 01ஆம் திகதி வரை பிரகடனப்படுத்த ப்பட்டுள்ளது.

மழையுடன் நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் பரவும் அபாயம் உள்ளதால், அந்த அபாயத்தைக் குறைப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி செயலகத்தின் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன்படி நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் ஜூன் 01ஆம் திகதி வரை நடைபெறவுள்ள டெங்கு தடுப்பு வாரத்தின்போது கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தெரியப்படுத்த விசேட விழிப்புணர்வு வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இது தவிர, அரச நிறுவனங்கள், மத ஸ்தலங்கள், புதிய குடியிருப்புகள் போன்றவற்றைச் சுற்றிப் பரவும் டெங்கு அபாயத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கிய சாகல ரத்நாயக்க, இதனைக் கடைப்பிடிக்காதவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய திணைக்களங்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேலும் மே மாதத்தில் 1810 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும், ஒன்பது மரணங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

(அ)

# பொதுஜன பெரமுன நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே ரணில் செயல்படுகின்றார்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மே. 25

நாட்டின் தற்போதைய ஜனாதிபதி, ஆட்சிக்கு வந்தநாள் முதல் பொதுஜன பெரமுனவின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே செயற்படுகின்றார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துலால் பண்டாரிகொட தெரிவித்தார்.

காலியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தி தேர்தலை எதிர்கொள்ளதயாராகவே உள்ளது. தேர்தலை எதிர்கொள்வதற்கான வேலைத்திட்டங்களை நாம் கிராம மட்டத்திலிருந்து மிகவும் பலமிக்கதாக ஆரம்பித்துள்ளோம்.

எதிர்வரும் சில நாட்களுக்குள் ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணி ஸ்தாபிக்கப்படும். எம்முடன் இணைவதற்கு பலர் அரசியல் கட்சிகள் முன்வந்துள்ளன.எந்தவொரு தேர்தலாக இருந்தாலும் அதனை எதிர்கொள்ள நாம் தயார்.

ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் ஜனாதிபதி பதவியேற்ற சந்தர்ப்பத்தில் அவர் புதிய கொள்கை திட்டங்களுடன் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பார் என்ற எதிர்ப்பார்ப்பு காணப்பட்டது. ஆனால் அவர் பொதுஜன பெரமுனவின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே செயற்படுகின்றார்-என்றார்.

# கொழும்பு-பதுளை பிரதான வீதி போக்குவரத்து முற்றாக பாதிப்பு

கொழும்பு, மே. 25

நிலவும் கடும் மழை மற்றும் கடும் காற்றுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக கொழும்பு - பதுளை பிரதான வீதியில் ஹப்புத்தளைக்கும் தியத்தலாவைக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்று நான்கு இடங்களில் பாரிய மரங்கள் முறிந்து வீழ்ந்தன.

இதனால் வீதி முற்றாக தடைப்பட்டுள்ளதாக தியத்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீதியை பயன்படுத்துவோருக்கு மாற்று வீதிகளை பயன்படுத்துமாறும் தியத்தலாவ பொலிஸ் நிலைய பிரதான பரிசோதகர் சாகர தயாரத்ன தெரிவித்தார்.

மேலும் தியத்தலாவ இராணுவம், தியத்தலாவ பொலிஸார், ஹப்புத்தளை விசேட அதிரடிப் படை, ஹப்புத்தளை பிரதேச சபை, ஹப்புத்தளை பிரதேச செயலகம் என்பன இணைந்து இந்த வீதியில் வீழ்ந்துள்ள மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

(அ)

# கஞ்சி கொடுத்தால் வரும் சுகாதார அதிகாரிகளை வெசாக் தின தன்சல்களில் காணவே முடியவில்லை

## செல்வராஜா கஜேந்திரன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே. 25

கஞ்சி வழங்கினால் பரிசோதிக்க வரும் சுகாதார அதிகாரிகளை வெசாக் தன்சல்களில் காணமுடியவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் முகநூல் பதிவொன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்கள் கஞ்சி கொடுத்தால் கைது செய்து சிறையில் அடைக்கிறார்கள்.

ஆனால் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஐஸ்கிறீம் கொடுக்கலாம்.




கஞ்சி வழங்கினால் இன [illegible]

சிங்களவர்கள் வசிக்காத வடக்கு - கிழக்கில் வெசாக் கொண்டாடினால் இன நல்லிணக்கம் பாதிக்கப்படுமென தடை வழங்கவில்லை.

கஞ்சி வழங்கினால் பரிசோதிக்க வரும் சுகாதார அதிகாரிகளை வெசாக் தன்சல்களில் காணமுடியவில்லை.

வீதியோரமாக அனுமதியின்றி ஒரு சிறு வியாபாரியால் கடை போட முடியாது. ஆனால் இராணுவத்தினரால் அனுமதியின்றி ஆரிய குளத்தினுள் வெசாக் கூடுகளை கட்டமுடியும்.

தமிழ் மக்களுக்கு ஒரு நியாயம். சிங்களவர்களுக்கு இன்னொரு நியாயம்.

நம்புங்கள். இலங்கை ஜனநாயக நாடு. இங்கு சட்டத்திற்கு முன் அனைவரும் சமம்-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல தேர்தல்களையும் எதிர்கொள்ளத் தயார்!

## கூறுகின்றது பொதுஜன பெரமுன



கொழும்பு, மே. 25

"ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன எத்தகைய விவாதங்களை முன்னெடுத்தாலும் இரு தரப்பினரும் தோல்வியை தழுவநேரிடும்" என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம் சந்திரசேன தெரிவித்துள்ளார்.


பொதுஜன பெரமுன கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொதுஜன பெரமுனவின் தொகுதி மாநாடு நாளை அநுராதபுரத்தில் இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத்தேர்தல், உள்ளூராட்சிமன்ற தேர்தல் என அனைத்தையும் எதிர்கொள்ளத் தயாராகவே உள்ளோம். பொதுஜன பெரமுனவை பிளவடையச் செய்வதற்கு பலர் முயற்சித்திருந்த போதிலும் வலுவான கட்சியாக வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம்.

தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியன மக்கள் மத்தியில் தோல்வியடைந்த கட்சிகளாகும். இரு கட்சிகளின் தலைவர்கள் எவ்வாறான விவாதங்களை முன்னெடுத்தாலும் அவர்கள் இருவருமே தோல்வியை தழுவநேரிடும். ஏனெனில் இருவரிடமும் பொருளாதார கொள்கைத் திட்டம் கிடையாது-என்றார். (அ)



# முல்லைத்தீவில் தமிழில் வெசாக்!

முல்லைத்தீவு, மே. 25

தமிழ் பக்திப் பாடல்கள் மற்றும் பௌத்த வரலாற்றுக் கதைகளுடன் முல்லைத்தீவில் வெசாக் தினம் கொண்டாடப் பட்டது.

கௌதம புத்தரின் பிறப்பு, ஞானம் பெறல் மற்றும் பரிநிர்வாணத்தை நினைவு கூரும் புனித நாளான வெசாக் தினம் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் நேற்று முன் தினம் கொண்டாடப்பட்டிருந்தது.

மேற்படி வெசாக்தினம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு 59ஆவது காலல் படையினரின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை மைதானத்தில் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் புத்த பெருமானின் பரிநிர்வாணத்தை நினைவுகூரும் வரலாற்றுக் கதைகளும் தமிழ் பக்தி பாடல்களும் ஒலிபரப்பப்பட்டன. (அ)

# கடும் காற்று காரணமாக கொக்குவிலில் வீடு சேதம்



யாழ்ப்பாணம், மே. 25

அதிக காற்று காரணமாக யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு பகுதியில் உள்ள வீடொன்றின் மீது பனைமரம் முறிந்து விழுந்து சேதமடைந்தது.

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் ஜே 125 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட வீடொன்றே இவ்வாறு சேதமானது.

அதிக காற்று காரணமாக நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த நால்வர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

குறித்த அனர்த்தம் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிக்கையிட்டுள்ளது. (அ)

# இந்தியாவில் கைதானவர்களுடன் தொடர்பில் இருந்தவர் சிக்கினார்!

கொழும்பு, மே. 25

இந்தியாவில் கைது செய்யப்பட்ட இலங்கையைச் சேர்ந்த 4 ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த இலங்கையர் ஒருவர் மாளிகாவத்தை பகுதியில் வைத்து பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள 4 ஐ.எஸ். பயங்கரவாதிகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள நான்கு இலங்கையர்கள் தொடர்பிலான தகவல்களை குறித்த குழுவிலுள்ள புலனாய்வுப் பிரிவினர் கோரியுள்ளனர். இந்த நிலையில் குறித்த நான்கு நபர்களுடன் நாட்டினுள் தொடர்பு வைத்திருந்த நபர்கள் தொடர்பாக ஏற்கனவே தனியான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த ஒருவர் மாளிகாவத்தையில் வைத்து பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவரே சம்பந்தப்பட்ட நால்வருக்கும் விமானச் சீட்டு வழங்குவது உள்ளிட்ட பல்வேறு உதவிகளை செய்து வந்துள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் தற்போது பயங்கரவாத புலனாய்வு பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி இரவு இண்டிகோ விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக சென்னை நோக்கி குறித்த நால்வரும் இலங்கையில் இருந்து புறப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால், இலங்கையை சேர்ந்த வேறு ஐ.எஸ். பயங்கரவாதிகள் வேறு விமானங்களின் ஊடாக இந்தியாவுக்கு சென்றுள்ளனரா என்பது தொடர்பாகவும் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட நால்வரும் இதற்கு முன்னரும் போதைப் பொருள் கடத்தல் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டவர்கள் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மேலும், இந்தியாவில் கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவரான மொஹமட் நுஸ்ரான், நாட்டில் பாரிய போதைப்பொருள் கடத்தல் காரரான பொட்ட நௌபரின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சட்டவிரோதமாக மதுபானத்தை வைத்திருந்த குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, மே. 25

சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டதாக மல்சிறிபுர பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோத மதுபானம் கடத்துவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டார்.

மல்சிறிபுர திக்தெனிய பிரதேசத்தில் உள்ள இவரது வீட்டுக்கு விடுமுறையில் சென்ற போது சட்டவிரோத மதுபானம் வைத்திருந்திருந்தமை தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மல்சிறிபுர பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கருத்துச் சுதந்திரத்தில் இலங்கை முன்னேற்றம்

கொழும்பு, மே. 25

கருத்துச் சுதந்திரத்தில் இலங்கை உள்ளிட்ட 5 நாடுகள் முன்னேற்றம் கண்டுள்ளன.

உலகளாவிய கருத்துச் சுதந்திர வெளிப்பாடு தொடர்பான புதிய அறிக்கையொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பிரேசில், தாய்லாந்து, நைஜர் மற்றும் பிஜி ஆகிய நாடுகளுடன் இலங்கையும் அதிக வெளிப்படைத்தன்மையை நோக்கி நகர்வதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

25 குறிகாட்டிகளைப் பயன்படுத்தி, உலகளவில் சுதந்திரமான கருத்து மற்றும் தகவலுக்கான உரிமையின் பகுப்பாய்வை குறித்த அறிக்கை வெளிப்படுத்துகின்றது.

உலகெங்கிலும் உள்ள 195 நாடுகளில் 161 நாடுகளில் இந்த குறிகாட்டிகளின் வெளிப்பாடு குறித்த ஆய்வில் கண்காணிக்கப்பட்டது. (அ)

# துப்பாக்கிச் சூட்டில் யானை பலி!

கொழும்பு, மே. 25

அனுராதபுரம், ஹித்தோகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹல்மில்லகுளம் பிரதேசத்தில் நேற்று முன் தினம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யானை ஒன்று உயிரிழந்துள்ளதாக திரப்பனை வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஹல்மில்லகுளம் பிரதேசத்தில் உள்ள தோட்டமொன்றிற்குள் அத்துமீறி நுழைந்த காட்டு யானைக் கூட்டமொன்று தோட்டத்திலிருந்த பயிர்களைச் சேதப்படுத்திக் கொண்டிருக்கும் போது அங்கிருந்த நபரொருவர் இந்த யானைகளை விரட்ட முயன்றுள்ளார்.

இதன்போது, அங்கிருந்த யானை ஒன்று இவரைத் துரத்திச் சென்றுள்ள நிலையில் குறித்த நபர் தனது கையிலிருந்த துப்பாக்கியால் யானையைச் சுட்டுக் கொலை செய்துள்ளதாக வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

7 அடி, 3 அங்குலம் உயரம் கொண்ட 20 வயதுடைய ஆண் யானையொன்றே உயிரிழந்துள்ளது.

இதனையடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக வனஜீவராசிகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

ஹல்மில்லகுளம், துருவில பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அனுராதபுரம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலுக்குப் பின் உடனடியாக பொதுத் தேர்தல்!

## இரு தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்த ஜனாதிபதி இணங்கவில்லை

கொழும்பு, மே. 25

**ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் உடனடியாக ஒரு பொதுத் தேர்தல் நடைபெறும் என கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாகவோ அல்லது இரு தேர்தல்களையும் ஒரே சமயத்தில் நடத்துவதற்கோ ஜனாதிபதி இணக்கம் காண்பிக்கவில்லை.**

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படும் என அவர் அமைச்சரவையில் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றதன் பின்னர் உடனடியாக பொதுத்தேர்தல் அறிவிக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் வேட்பாளர் அவரது கட்சி அல்லது கூட்டணிக்கு பெரும்பான்மையுடன் புதிய பாராளுமன்றத்தை தேர்ந்தெடுப்பார்.

இறுதியாக 2020 ஆண்டு ஒகஸ்ட் மாதம் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. மேலும் ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் ஒரே நேரத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளும் காணப்படுகின்றன.

அரசியலமைப்பின் பிரகாரம் அறிவிக்கப்பட்ட எந்தவொரு தேர்தலையும் நடத்துவதற்கு தேர்தல் ஆணையம் கடமைப்பட்டுள்ளது.

2024ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு நாளில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த காலப்பகுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு வேட்புமனுக்கள் கோரப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தேர்தல் பதிவேடு உருவாக்கம் உள்ளிட்ட அத்தியாவசிய நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக ஏற்பாடுகள் மற்றும் தயார்படுத்தல்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மீட்புப் பணிக்கு விமானப் படையின் மூன்று விமானங்கள் தயார் நிலையில்

கொழும்பு, மே. 25

நாட்டில் நிலவும் மழையுடனான வானிலையை அடுத்து, மூன்று ஹெலிகொப்டர்களை தயார் நிலையில் வைத்துள்ளதாக விமானப்படை தெரிவித்துள்ளது.

அவசர அனர்த்தங்கள் ஏற்படும் பட்சத்தில், பாதிக்கப்படுவோரை மீட்கும் நோக்கிலேயே இந்த ஹெலிகொப்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக விமானப்படை ஊடகப் பேச்சாளர் குரூப் கப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, கட்டுநாயக்க, இரத்மலானை மற்றும் ஹிங்குரங்கொட விமானப்படை தளங்களில் இந்த ஹெலிகொப்டர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய செயற்படும் வகையில், விமானப்படை மீட்பு குழுக்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# நீதிமன்றத்துக்குள் யுவதி ஒருவருடன் சேட்டை செய்த சட்டத்தரணி கைது!

கொழும்பு, மே. 25

நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளர் ஒருவரை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் சட்டத்தரணி ஒருவரை நீர்கொழும்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீதிமன்ற வளாகத்தில் சந்தேகநபர் தம்மை இரு கைகளாலும் பிடித்து இழுத்து, உடலில் சாய்த்து, அங்க சேட்டையில் ஈடுபட்டு, தனது காதலை வெளிப்படுத்தியதாக திவுலப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய அலுவலக உதவியாளர் நீர்கொழும்பு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன் எதிரொலியாக நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் இலக்கம் 02 நீதிமன்றத்துக்குச் சென்ற உப பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் கடவத்தையில் வசிக்கும் 36 வயதுடைய சட்டத்தரணியான சந்தேக நபரை கைது செய்தனர்.

நபர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். பொலிஸ் விசாரணைகள் நடந்து வருகின்றன. (அ)

# ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு தீர்மானமில்லை!

கொழும்பு, மே. 25



ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிப்பதற்கு எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதன்படி, இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், பாராளுமன்றத்தை கலைப்பது தொடர்பில் எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (அ)

# இலங்கையின் நிலக்கரிச் சுரங்கங்களை கையப்படுத்தும் முயற்சியில் இந்தியா

கொழும்பு, மே. 25

நாட்டின் நிலக்கரி சுரங்கத்தை கையகப்படுத்துவது தொடர்பில் இலங்கையுடன் இந்திய அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக தெரியவருகிறது.

நிலக்கரியின் தேவை படிப்படியாக அதிகரித்து வரும் நிலையில் இந்த பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், இந்த விடயம் தொடர்பான மேலதிக விவரங்கள் வெளியிடப்படாத போதிலும், பேச்சுவார்த்தை ஆரம்ப கட்டத்தில் இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையில் காணப்படும் நிலக்கரி உலகளவில் மிகவும் தரம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

கடந்த வருடம் இலங்கை அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட 30 முக்கிய கனிம பொருட்களின் பட்டியலில் நிலக்கரியும் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையிலே, இந்தியாவின் சில நிறுவனங்கள் வெளிநாடுகளில் உள்ள கனிம பொருட்கள் தொடர்பில் தேடுதல்களை ஆரம்பித்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (அ)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்புமனுக்களை செல்லுபடியற்றதாக்குமாறு கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, மே. 25



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை செல்லுபடியற்றதாக்குமாறு பல கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளதாக மாகாண சபைகள் மற்றும்உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வழக்குகள் விசாரணைகள் காணப்படுகின்ற நிலையில் தேர்தலை நடத்த முடியாது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் இது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படும் - என்றார். (அ)

# ரணிலிடம் 12 வருடங்கள் நாட்டை ஒப்படையுங்கள்

## இல்லையெனில் இலங்கை மீண்டும் வங்குரோத்து நிலை என்கிறார் வஜிர

கொழும்பு, மே. 25



இன்னும் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை ஆள வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

வெசாக் பண்டிகையினை முன்னிட்டு காலி மாவட்டத்தில் நடைபெற்றுவரும் வெசாக் வலயத்திற்கான நிதியுதவி மற்றும் அரசி விநியோகிக்கும் நடவடிக்கை கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன இந்த விடயத்தை கூறினார்.

அத்துடன், 1949 ஆம் ஆண்டு பிறந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போது 75 வயது. இதன்படி, இன்னும் 12 ஆண்டுகள், அதாவது 87 வயதுவரை அவரால் ஆட்சி செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த பாதையினை எவரேனும் மாற்றினால் எமது நாடு மிகவும் கடினமான நிலைக்கு மீண்டும் தள்ளப்படும் எனவும் வஜிர அபேவர்தன சுட்டிக்காட்டினார். (அ)

# ரயில் சமிக்ஞை கோளாறு; போக்குவரத்தில் பாதிப்பு

கொழும்பு, மே. 25

மலையக ரயில் சமிக்ஞை அமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நேற்று முதல் வெள்ளிக்கிழமை காலை முதல் மலையக ரயிலின் பாதையின் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

ரயில் பாதையில் மண், கற்கள் மற்றும் மரங்கள் விழுந்துள்ளதால் ரயில் தாமதமாக வருவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதல்கஸ்ஹின்ன, ஒஹியா, அம்பேவெல மற்றும் பட்டிபொல ரயில்வே நிலையங்களுக்கு இடையிலான சமிக்ஞை அமைப்பு தடைப்பட்டது.

அத்தோடு, கொழும்பு மற்றும் பதுளை மற்றும் பதுளை கொழும்பு ஆகிய பிரதேசங்களுக்கிடையிலான இரவு நேர அஞ்சல் ரயில்களையும் இரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், நேற்றைய விசேட ரயில் சேவையும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மார்ச் 12 இயக்கத்தின் மக்கள் மேடை நாளை!

காரைதீவு, மே. 24

**அம்பாறை மாவட்ட மார்ச் 12 இயக்கத்தின் மக்கள் மேடை நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை காரைதீவில் நடைபெறவுள்ளது.**

**தூய்மையான அரசியலுக்காக செயல்படும் மார்ச் 12 இயக்கத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் கந்தையா சத்தியநாதன் தலைமையில் இந் நிகழ்வு காரைதீவு பாபா றோயல்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.**

இதற்கென மாவட்டத்தில் உள்ள அரசியல் பிரமுகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். கிராம ரீதியாக மூவர் இந் நிகழ்வில் கலந்து கொள்ள அனுமதிக்கிறது.

நாம் எமது வாக்குகளை அறிவு பூர்வமாக பயன்படுத்த வேண்டும். தகுதியானவர்களை மாத்திரமே பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்ப வேண்டும். இதுவே எமது தலையான கடமையாகும் என்று மார்ச் 12 இயக்கத்தின் அம்பாறை மாவட்டக் கிளை அறிவித்துள்ளது.

இணைப்பாளர் சத்தியநாதன் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஒக்ரோபர் 16 ஆம் திகதி சகல தேர்தல் அதிகாரங்களும் தேர்தல் ஆணையகத்திடம் செல்கின்றன.அதன் பின்பு பாராளுமன்றமோ அல்லது ஜனாதிபதியோ தேர்தலில் தலையிடும் அதிகாரம் இருக்காது.எதிர்வரும் அக்டோபர் மாதத்தில் ஜனாதிபதி தேர்தல் வைத்தே ஆக வேண்டும். எனவே மக்கள் விழிப்படைய வேண்டும்.

நிதியின்மை போன்ற காரணங்களை காட்டி உள்ளூராட்சி தேர்தல் பின்போடப்பட்டது. இருந்தபோதிலும் எதிர்வரும் ஒக்ரோபரில் தேர்தல் நடத்தியாக வேண்டும் .

மார்ச் 12 இயக்கத்தின் குறிக்கோளின் படி எட்டு தகுதிகள் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் வேட்பாளருக்கு இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அந்த எட்டு தகுதிகளும் இருக்கின்றவர்களுக்கு தான் வேட்புமனு தாக்கல் செய்ய அனுமதிஅளிக்க வேண்டும். கட்சிகளும் அனுமதி அளிக்க வேண்டும்.

தரமான பிரதிநிதியை தெரிவு செய்கின்ற உரிமை மக்களுக்கு இருக்கிறது. பாராளுமன்ற தேர்தல் எடுக்கின்ற முடிவு அடிப்படையில் நாட்டின் கிராமத்தின் மற்றும் உங்களது நகரத்தின் எதிர்காலமும் உங்களது பிள்ளைகளின் எதிர்காலமும் தங்கி உள்ளது-என்றார்.

(அ)



# குண்டும் குழியுமாக வீதி

மட்டக்களப்பு, மே. 25

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குற்பட்ட முல்லைத்தீவிலிருந்து ஆலம்குளத்திற்கு செல்லும் பிரதான வீதியின் இடைநடுவில் குண்டும் குழியுமாக காணப்படுவதால் பிரயாணிகள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

அட்டாளச்சேனையிலிருந்து இவ்வீதியுடாக அம்பாறை, தீகவாபி, இறக்காமம், வரிப்பத்தான்சேனை, ஆலம்குளம், சம்பு நகர் போன்ற பிரதேசங்களுக்கு நாளந்தம் நூற்றுக்கணக்கான அரச ஊழியர்களும், பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும், வயல் நிலங்களுக்கு செல்லும் விவசாயிகளும் சென்று வருகின்றனர்.

ஆகவே பொதுமக்களின் நண்மை கருதி அட்டாளைச்சைனை பிரதேச சபை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்வுகொண்டு குண்டும் குழியுமாக காணப்படும் குறித்த வீதியினை பணரமைத்து தருமாறு இப்பாதையூடாக பிரயாணம் செய்யும் பொதுமக்கள் கேட்டுள்ளனர். (அ)



# "இலங்கையிலும் அதற்கு அப்பாலும் வரலாறு கண்ட நிகழ்வுகள்" அறிமுகம்

திருமலை, மே. 25

திருமலை "தோமஸ் ஜெயேந்திரன்" அவர்களின் படைப்பில் உருவான "இலங்கையிலும் அதற்கு அப்பாலும் வரலாறு கண்ட நிகழ்வுகள் " நூல் அறிமுக விழா திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் பொது நூலக உதவியாளர் அரசரெட்ணம் அச்சுதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன் போது முதன்மை விருந்தினராக திருகோணமலை நகராட்சிமன்ற செயலாளர் வெ.இராஜசேகரும், சிறப்பு விருந்தினராக நகராட்சிமன்ற பொது நூலக பிரதம நூலகர் ந.யோகேஸ்வரனும் கலந்து சிறப்பித்தனர்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வின் வரவேற்புரை நகராட்சிமன்ற பொது நூலக நூலகரான திருமதி. எம். எல்.றிம்ஸானா நிகழ்த்தினார்.

நிகழ்வில் நூலின் முதற் பிரதியினை திருகோணமலை நகராட்சிமன்ற செயலாளர் திரு. வெ.இராஜசேகர் பெற்றுக் கொண்டார். நகராட்சிமன்ற பொதுநூலக வாசகர்வட்ட உறுப்பினரான செல்வி தாஹிரா சித்திக் நிகழ்வுகளை தொகுத்து வழங்கியிருந்தார். (அ)

# கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தை உப செயலகம் என கூறுபவரால் தீர்வு வருமா?

## கேள்வி எழுப்புகிறார் ஜெயசிறில்

காரைதீவு, மே. 25

"அரச வர்த்தமானியால் பிரகடனம் செய்யப்பட்ட கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை உப பிரதேச செயலகம் என்று கூறுபவரால் தீர்வு கிட்டுமா? இவர்களை தமிழ் முஸ்லிம் மக்கள் இன்னமும் நம்புகிறீர்களா?"

இவ்வாறு காரைதீவில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவரும் காரைதீவு பிரதேச முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கூறினார்.

பாராளுமன்றத்தில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் ஆற்றிய உரைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இவர் மேற்படி கருத்தைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

காரைதீவில் 65 வீதம் 12 கிராம சேவக பிரிவில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு 20 லட்சம் ரூபாயும்,35 வீதம் 5 கிராம சேவக பிரிவில் வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு 46 லட்ஷம் ரூபாயும் இவரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் இருந்தே தெளிவாக விளங்குகின்றது காரைதீவு ஒருங்கிணைப்பு குழு தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் முஷாரப் தமிழ் மக்களுக்கு மிக அநியாயம் செய்துகொண்டிருக்கின்றார் என்பது.

தமிழ் முஸ்லிம் இன முரண்பாடுகள் வருவதற்கு காரணம் இவ்வாறான அரசியல்வாதிகளினால் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

முஸ்லிம்களுக்கு கூடுதலாக நிதிஒதுக்கியும் தமிழர்களுக்கு குறைவாக ஒதுக்குவதும் பிணக்குகள் வர காரணமாக இருக்கிறது.

காரைதீவிலும் நாவிதன்வெளியிலும் பாரிய புறக்கணிப்பை செய்திருந்தார். கல்முனை வடக்கில் அபிவிருத்திக்குழு கூட்டத்தினை கூட்டவில்லை.

அங்கால பக்கம் போகவுமில்லை. அமைச்சரவை அங்கீகரித்த பிரதேச செயலகம் என்ற அந்தஸ்தை பொய்யாக்கி அதுவொரு உப பிரதேச செயலகம் என்கிறார்.அப்படிப்பட்டவரிடம் எம்மவர்கள் மகஜர் கொடுத்து ஜால்ரா அடிக்கிறார்கள்.

இனிமேலாவது தமிழ் பிரதேச செயலகங்களுக்கு இவ்வாறு இன ரீதியாக இனவாதிகளாக செயல்படுகின்ற ஒருங்கிணைப்பு தலைவர்களை அரசாங்கம் அல்லது இந்த நாட்டினுடைய அமைச்சர்கள் நியமிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு இனத்தை அடிமையாக்கும் சிந்தனையில் செயல்படும் இனவாதி இவரைப் போன்றவர்களை சகோதர முஸ்லிம்களே புறக்கணிக்க வேண்டும். தமிழ் முஸ்லிம் இனத்தவர்களை நல்லிணக்கத்துக்கு பங்கம் விளைவிப்பவர்கள் இவ்வாறான செயற்பாட்டையும் அவருடைய கருத்துக்களையும் வன்மையாக கண்டிக்கின்றேன்.

29 கிராம சேவக பிரிவை கொண்ட ஒரு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்த விட மாட்டேன் என்ற கருத்தையும் தரம் உயர்த்தப்பட்டதையும் மறைக்கும் நிர்வாக கடமைக்கு தடை போடும் இவ்வாறானவர் எவ்வாறு எமது தமிழ் பிரதேச அபிவிருத்தி குழு தலைவர் ஆக ஏற்றுக் கொள்வது?

உணர்வு உள்ளவர்கள் அனைவரும் இவ்வாறானவர்களை புறக்கணிக்க வேண்டும் என்பதை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும். இனங்களை பகடைக்காயாக பயன்படுத்தி தனக்கு ஒரு அரசியல் இருப்பை தக்க வைப்பதற்காகவே இந்த நாடகம். தேர்தலுக்காக ஆசனம் வழங்கிய கட்சியையும் தலைமையையும் புறந்தள்ளியவர் தனக்கான அதிகாரத்தை பெறுவதற்காக எவ்வாறான செயல்பாடுகளையும் செய்ய முனைவார். இவர்களை யாரும் நம்ப வேண்டாம்-என்றார். (அ)

# அம்பாறை சந்தையில் திருட்டு: 3 பெண்களை தேடும் பொலிஸ்!

அம்பாறை, மே. 25

அண்மைக் காலமாக அம்பாறை நகரில் உள்ள சந்தை ஒன்றில் பொருட்களை திருடியதாக சந்தேகிக்கப்படும் 3 பெண்கள் தொடர்பில் தகவல்களை தந்துதவுமாறு பொலிஸார் பொது மக்களிடம் கோரியுள்ளனர்.


குறித்த மூன்று பெண்களும் அண்மைக்காலமாக இவ்வாறான சம்பங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் இவர்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரிந்தால் அம்பாறை பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு 0718593256, 0772921071 என்ற இலக்கத்திற்கு அறிவிக்குமாறும் அம்பாறை பொலிஸார் கோரியுள்ளனர்.

(அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பப்புவா நியூகினியாவில் நிலச்சரிவில் 100 பேர் பலி!



போர்ட் மோர்ஸ்பை, மே 25

**பப்புவா நியூ கினியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 100க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை தெற்கு பசுபிக் தீவு நாடான பப்புவா நியூகினியாவின் எங்கா மாகாணத்தின் காகோலாம் கிராமத்தில் இந்த நிலச்சரிவு இடம்பெற்றுள்ளது.

இந்த நிலச்சரிவில் 100இற்கும் மேற்பண்டவர்கள் மண்ணில் புதையுண்டனர் என்று தெரிய வருகின்றது. எனினும், உத்தியோகபூர்வ தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

எனினும், பல உடல்கள் மீட்கப்படும் காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி வருகின்றன. (ஐ)

# மீண்டும் விண்வெளி செல்கின்றார் சுனிதா



நியூயோர்க், மே 25

அமெரிக்காவின் தனியார் நிறுவனமான போயிங் உருவாக்கியுள்ள 'ஸ்ரார்லைனர்' விண்வெளி ஓடத்தில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் அடுத்த மாதம் விண்வெளி செல்லவுள்ளார்.

ஏற்கெனவே, இந்த மாதத் தொடக்கத்தில் நடத்தப்படுவதாக இருந்த அந்த விண்வெளி ஓடத்தின் சோதனை ஓட்டம் கடைசி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டது.

அதை ஏந்திச் செல்லும் அட்லஸ் ஏவூர்தியின் ஒட்சிசன் அழுத்த வெளியேற்று வால்வு தானாக திறந்து மூடியதால் திட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக அதிகாரிகள் கூறினர்.

இந்த நிலையில், அட்லஸ் ஏவூர்தியில் இருந்த கோளாறு சரி செய்யப்பட்டதால் 'ஸ்ரார்லைனர்' விண்வெளி ஓடத்தை ஜூன் 5 ஆம்தி திகதிக்குள் விண்ணில் செலுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக நாசா விண்வெளி ஆய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த விண்வெளி ஓடத்தை சுனிதா வில்லியம்ஸ் இயக்குவார். அவருடன் மற்றொரு நாஸா விண்வெளி வீரர் பட்ச் வில்மோரும் விண்வெளி செல்வார். (ஐ)

# சீனா, ஜப்பான், தென்கொரிய தலைவர்கள் நாளை சந்திப்பு



சியோல், மே 25

சீனா, ஜப்பான், தென்கொரியா நாடுகளின் தலைவர்கள் 5 ஆண்டுகளின் பின்னர் சந்தித்து நாளை பேச்சு நடத்தவுள்ளனர்.

தென்கொரியா, சீனா, ஜப்பான் நாடுகள் இடையேயான முத்தரப்பு உச்சி மாநாடு 2008ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. இதன்படி அந்த நாடுகளின் தலைவர்கள் ஆண்டுதோறும் சந்தித்து பேச்சு நடத்தினர். ஆனால், கொரோனா தொற்றுக்கு பிறகு இந்த சந்திப்பு நிறுத்தப்பட்டது. தற்போது கொரோனா தொற்று பாதிப்பு குறைந்து இயல்பு நிலை திரும்பியதால் இந்த முத்தரப்பு உச்சி மாநாடு 5 ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் நடைபெறவுள்ளது.

இதன்படி இந்த ஆண்டுக்கான முத்தரப்பு உச்சிமாநாடு தென்கொரியா தலைநகர் சியோலில் நடைபெறுகிறது. இதில் தென்கொரிய ஜனாதிபதி யூன் சுக் இயோல், சீன பிரதமர் லீ கியாங் மற்றும் ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா ஆகியோர் சந்திக்க உள்ளனர்.

இதன்போது தென் சீனக்கடல் விவகாரம், கொரிய தீபகற்பத்தில் நிலவும் பதற்றம் உள்ளிட்டவை குறித்து அவர்கள் பேச்சு நடத்துவர் என்று கூறப்படுகின்றது. (ஐ)



## மசூதி மீது இஸ்ரேல் தாக்குதல் 10 சிறுவர்கள் உட்பட 16 பேர் பலி!


காசா, மே 25

காசாவின் மேற்குகரையில் பள்ளவாசல் ஒன்றின்மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 10 சிறுவர்கள் உட்பட 16 பேர் கொல்லப்பட்டனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இதேநேரம், அல் - சக்ரா மசூதியில் பதுங்கியிருந்த ஹமாஸ் அமைப்பினரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் ஏவுகணைகள், ஆளில்லா விமானங்களை இஸ்ரேல் பயன்படுத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், இந்தத் தாக்குதலில் 10 சிறுவர்கள் உட்பட 16 பேர் உயிரிழந்தனர் என்று அரபு நாட்டின் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)



## பிரசார மேடை சரிந்ததில் குழந்தை உட்பட 9 பேர் பலி!

மெக்சிக்கோ, மே 25

மெக்சிக்கோவில் தேர்தல் பிரச்சார மேடை சரிந்து விழுந்த விபத்தில் ஒரு குழந்தை உட்பட ஒன்பது பேர் உயிரிழந்தனர். மேலும், 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

மெக்சிக்கோவில் வரும் ஜூன் 2-ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதனையொட்டி, அரசியல் கட்சி தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், அந்நாட்டின் வடக்கு மாகாணமான நியூவோ லியோனில் உள்ள சான் பெட்ரோ கார்சா கார்சியா நகரில் நேற்றுமுன்தினம் பலத்த காற்று வீசியது.

அப்போது, குடிமக்கள் இயக்கம் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடும் ஜோர்ஜ் அல்வாரெஸ் மேனெஸின் பிரசார மேடை சரிந்து வீழ்ந்தது. இதில், குழந்தை உட்பட 9 பேர் உயிரிழந்தனர். 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

# அபாயகரமான ஆயுதங்களை ரஷ்யாவுக்கு அளிக்கிறது சீனா

லண்டன், மே 25

உக்ரைன் போரில் பயன்படுத்துவதற்காக ரஷ்யாவுக்கு சீனா அபாயகரமான ஆயுதங்களை விநியோகிப்பதாக பிரிட்டன் குற்றஞ்சாட்டியுள்ளது.

உக்ரைனின் வடகிழக்குப் பகுதியில் ரஷ்யா அண்மைக் காலமாக தீவிரமாக தாக்குதல் நடத்தி முன்னேறிவரும் சூழலில் சீனா மீது இந்தக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இது குறித்து பிரிட்டன் பாதுகாப்புத் துறை அமைச்சர் கிராண்ட் ஷாப்ஸ் கூறியவை வருமாறு,

எங்களுக்கு கிடைத்துள்ள புதிய உளவுத் தகவலின்படி, உக்ரைன் போரில் பயன்படுத்துவதற்கான ஆயுத தளவாடங்களை ரஷ்யாவுக்கு சீனா விநியோகித்துவருகிறது.

எனவே, மேலை நாடுகள் விழிப்படைந்து உக்ரைனுக்கான உதவிகளை அதிகரிக்க வேண்டும் என்றார் அவர்.

ஏற்கெனவே, உக்ரைன் போரில் பயன்படுத்துவதற்கான ஆயுதங்களை தயாரிப்பதற்குத் தேவைப்படும் முக்கிய பொருள்களை ரஷ்யாவுக்கு சீனா அனுப்புவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## தாய்வானை சுற்றி சீனாவின் போர் பயிற்சி நேற்றும் நடந்தது

பீஜிங், மே 25

தாய்வானை சுற்றி இரண்டாவது நாளாக நேற்று வெள்ளிக்கிழமையும் சீனா போர் ஒத்திகையை தொடர்ந்தது.

கடந்த 1949ஆம் ஆண்டில் முடிந்த உள்நாட்டுப் போருக்குப் பிறகு தாய்வான் பிரதேசம் சுதந்திரமாக செயல்பட்டுவருகிறது. எனினும், அதனை தங்கள் நாட்டின் ஒரு பகுதியாகவே சீனா கருதுகிறது. தாய்வானும் தன்னை தனி நாடாக இதுவரை பிரகடனப்படுத்தவில்லை.

தாய்வானை எப்போது வேண்டுமானாலும் தங்களுடன் இணைத்தாலும் உரிமை தங்களுக்கு உள்ளதாக சீனா கூறிவருகிறது. தேவைப்பாட்டால் இராணுவ வலிமையைக்கூட இதற்காகப் பயன்படுத்தலாம் என்றும சீனா கூறுகிறது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் தாய்வானை சுற்றி சீனா கடல், வான் வழி போர் ஒத்திகையை தொடங்கியது. இந்தப் போர் ஒத்திகை நேற்றும் தொடர்ந்தது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரப் போரை வெல்லும் ஒருவரே மொட்டு கட்சி வேட்பாளர்

## கூறுகிறார் சாகர காரியவசம்

கொழும்பு, ,மே. 25

**போரை மகிந்த ராஜபக்ஷ முடிவுக்கு கொண்டுவந்தது போல பொருளாதாரப் போரை வெற்றி கொள்ளக்கூடிய ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம் - என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**



கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

பொதுஜன பெரமுன கட்சி இதுவரை எந்தவொரு தேர்தலிலும் தோற்றது கிடையாது. ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க கட்சி சார்பில் சில வேட்பாளர்கள் தயார் நிலையிலேயே உள்ளனர். உரிய நேரம்வரும் போது வெற்றிவேட்பாளரைக் களமிறக்கி ஜனாதிபதி தேர்தலிலும் வெற்றி நடைபோடுவோம்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கருத்து கூறுவதில் இருந்து விலகி இருக்குமாறு கட்சி தீர்மானித்துள்ளது. எனவே, தற்போதைய சூழ்நிலையில் வேட்பாளர் பெயரை, கட்சி முடிவை மீறி அறிவிக்க முடியாது.

மகிந்த ராஜபக்ச பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்திய வர். தலா தேசிய உற்பத்தியையும் அதிகரிக்க செய்தார். அப்போது தம்மிக்க பெரேரா மகிந்த ராஜபக்சவின் செயலாளராகவும், முதலீட்டுச் சபையின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

நாட்டை மீட்கக்கூடிய தலைவராகவே மகிந்த ராஜபக்சவை அன்று மக்கள் தெரிவு செய்தனர். அவர் மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றினார். போரை முடிவுக்கு கொண்டுவந்தார். அதே போல பொருளாதார போரை வெற்றிகொண்டு, நாட்டை மீட்கக்கூடிய வேட்பாளர் ஒருவரை நாம் நிறுத்துவோம்- என்றார். (அ)

# தொலைபேசி கம்பிகள் திருடி விற்ற 7 தொழில்நுட்ப வல்லுநர்கள் கைது!

கொழும்பு, மே. 25

வென்னப்புவ பகுதியில் 40 இலட்சம் ரூபா பெறுமதியான தொலைபேசி கம்பிகளை அறுத்து அப்பகுதியில் உள்ள பழைய உலோகக் கடைகளுக்கு விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் தொலைத்தொடர்பு நிறுவனத்தில் பணியாற்றிய 7 தொழில்நுட்ப வல்லுநர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

வென்னப்புவ துனுவில சந்தி மற்றும் கிரிமதியான சந்திக்கு இடையில் சுமார் 4 கிலோமீற்றர் தூரத்திற்கு பதிக்கப்பட்டிருந்த கம்பிகளே இவ்வாறு அறுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கட்டுனேரிய, மாரவில, தொடுவாவ, கொஸ்வத்தை, ஆனமடுவ, கொபேகனே ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 38, 43, 37, 35, 51, 45, மற்றும் 56 வயதுடைய 7 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# உயர்தரப் பரீட்சை பெறுபேறு அடுத்த வாரம் வெளியாகலாம்!

கொழும்பு, மே 25

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகள் அடுத்த 7 நாட்களுக்குள் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இறுதிக் கட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக பரீட்சை திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, தற்போது நிறைவடைந்துள்ள சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் 4 மாதங்களில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மானிய வட்டி வீதத்தில் வங்கிக்கடன் திட்டங்கள்

கொழும்பு, மே. 25

எதிர்வரும் வாரத்தில் இருந்து பல விசேட கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தொழில்துறையினருக்காக இந்த விசேட கடன் திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளதாக கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் தொழில் துறையினரின் நிதித் தேவைகள் கண்டறியப்பட்டு, வணிக வங்கிகள் மூலம் மானிய வட்டி வீதத்தில் கடன் வழங்கும் வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சாந்த வீரசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். (அ)

# காட்டு யானை தாக்கி ஒருவர் பலி!

கொழும்பு, மே. 25

மகாஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாதுரு ஓயா பகுதியில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக மகாஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மகாஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# சிட்னியில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்களின் வெளியீடு ஜூன் 7 இல்

சிட்னி, மே. 25

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்றுநூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் நடைபெற உள்ளது.










பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு சிட்னியில் உள்ள பெமுள்வே சமூக மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

எதிர்வரும் ஜூன் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 முதல் இரவு 9.00 வரை இவ் வெளியீட்டு நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்நிகழ்வின் தலைமையுரையை எழுத்தாள மாத்தளை சோமு ஆற்றுவார். பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை தனபாலசிங்கம் நிகழ்த்துவார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை டாக்டர். ஹாரூன் காசிம் ஆற்றுவார்.

இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுகவுரையை எழுத்தாளர் சுந்தரதாஸ் ஆற்றுவார்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் சிறப்புரை நிகழ்த்த உள்ளார். அத்துடன் கலாநிதி திருமதி. சந்திரிக்கா சுப்ரமண்யன், திருநந்தகுமார் ஆகியோரும் சிறப்புரை ஆற்றுவர்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் சிட்னியில் நடைபெறும் இந்நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவருடன் சந்திப்பும், நூல்கள் வெளியீடும் நடைபெற உள்ளது.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் நடைபெறும் நூல் வெளியீடும் இலக்கிய அரங்கின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார். (அ)

# பொருளாதார மாற்ற சட்டமூலத்துக்கு எதிராக தேசிய மக்கள் சக்தி வழக்கு!

கொழும்பு, மே. 25

பாராளுமன்றத்தில் திடீரென சமர்ப்பிக்கப்பட்டுள்ள, பொருளாதார மாற்றச் சட்டமூலத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்று உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.



கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய அரசாங்கம் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் மிகவும் கீழ்த்தரமான முறையில் செயற்படுகின்றது.

பொருளாதார முன்னேற்றம் என்று கூறிக்கொண்டு, பாரதூரமான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்துள்ளது.

அந்த சட்டமூலத்தில் முதலீட்டுச் சபையை இல்லாதொழிப்பதற்கான சரத்து உள்ளடக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வர்த்தக சபையோ, தொழிலதிபர்கள் சங்கங்களோ, தனியார் துறையோ எவரிடமோ கோரிக்கை விடுக்கப்படவில்லை.

எனவே இவ்வாறான சட்டமூலத்தைக் கொண்டுவருவதற்கான விருப்பம் என்னவென்பதை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். இந்த சட்டமூலத்தை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம்.

குறித்த சட்டத்தால் பாதிக்கப்படும் அனைத்துப் பிரிவினரும் ஒன்றிணைந்து இதற்கு எதிராகச் செயற்படவுள்ளோம்.

தொழிற்சங்கங்களுடன் இது தொடர்பில் நாங்கள் கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளோம் என்றார். (அ)

# திருக்குறளும் சுகநலமும் நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே. 25

குணராஜா நக்கீரன் எழுதிய திருக்குறளும் சுக நலமும் என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற உள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பொது சேவை ஆணைக்குழு செயலாளர் சி. திருவாகரன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரனும், யாழ் போதனா வைத்தியசாலை பொது மருத்துவ நிபுணர் மருத்துவர் த. பேரானந்தராஜாவும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனும் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கனும் கலந்து கொள்வர்.

நூலின் ஆய்வுரையை உளமருத்துவ நிபுணர் மருத்துவர் எஸ். சிவதாசும் நயப்புரையை யாழ். போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனானந்தாவும் மேற்கொள்ளவுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்தின்...

சேர்ந்த ஊடகவியலாளர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

ஜனாதிபதியின் நிகழ்வுகளில் முற்கூட்டியே பங்கேற்கும் ஊடகவியலாளர்களின் விவரங்களை பெற்று ஏற்பாட்டு குழுவினர் ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவிடம் வழங்குவது வழக்கம். ஆனால், நேற்றைய நிகழ்வை ஏற்பாடு செய்தவர்கள் இந்த நடைமுறையை பின்பற்றவில்லை. இதனால், யாழ்ப்பாணத்தை சேர்ந்த செய்தியாளர்கள் எவரும் ஜனாதிபதியின் நிகழ்வில் பங்கேற்க அனுமதிக்கப்படவில்லை என்று தெரிய வந்தது. (ஐ)

## 2005 தேர்தல்...

ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணித்து தனது பயணத்துக்கு தடையாக இருந்தனர் என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில், சுமந்திரன் எம். பி. தனது உரையில், “2005 இல் உங்கள் (ரணில்) பயணத்துக்கு வடக்கு மக்கள் தடையாக இருந்திருக்கலாம். அதை வடபகுதி மக்கள் இப்போதாவது வருத்தத்துடன் நினைவு கூருவார்கள் என நினைக்கிறேன்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த காலம் முதல் வடக்கு மற்றும் கிழக்கின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டுள்ளார் - என்றும் கூறினார். (ஐ)

## சீரற்ற காலநிலை...

தெரிவித்தார்.

மேலும், கடந்த 19ஆம் திகதி முதல் கனமழை ஆரம்பித்தது. இதனால் 18 மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில், 9 ஆயிரத்து 616 குடும்பங்களை சேர்ந்த 34 ஆயிரத்து 880 பேர் பாதிக்கப்பட்டனர்.

மரம் சரிந்து விழுந்ததால் 6 மரணங்கள் இடம்பெற்றுள்ளன. 11 பேர் காயமடைந்துள்ளனர். இதேவேளை 3 வீடுகள் முற்றாக சேதமடைந்தன. ஆயிரத்து 246 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கும் உதவி தொகைகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

## தமிழ் மக்களின் பிரச்னைகளை...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி துறை கட்டடத்தைத் திறந்து வைத்தார். இதன் பின்னர், அங்கு உரையாற்றிய அவர்,

யாழ்ப்பாணம் மாவட்டம் நீண்டகாலமாக அபிவிருத்தியின் பலனை அனுபவிக்கவில்லை. வருமானம் போதியளவில் இல்லை. மக்கள் வேலை தேடும் நிலை காணப்படுகிறது. யாழ். மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு அநேகமான சாத்தியங்கள் உள்ளன.

யாழ். மாவட்ட மக்களின் காணிப் பிரச்னைகள் உள்ளிட்ட சில பிரச்னைகளை எம்மால் தீர்க்க முடிந்துள்ளது. தடுப்புக் காவலில் உள்ள (அரசியல்) கைதிகள் தொடர்பில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அது தொடர்பான பிரச்னைகளும் உள்ளன.

எங்களால் இன்னும் இதனை முடிவுக்கு கொண்டு வர முடியவில்லை. அதற்கான தீர்வுகள் தற்போதுள்ள அரசியல் பிரச்னைகளைச் சுற்றியே உள்ளன. நல்லிணக்கத்தை கட்டியெழுப்புதல், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், இழப்பீடுகள், உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக நாம் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இந்தப் பிரச்னைகள் அனைத்தையும் தீர்க்க இதுவே நேரம் என்று நான் நம்புகிறேன்.

அதற்கு அனைவரும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முயற்சித்து வருவதோடு, வடக்கு - கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளேன்.

முன்னைய ஆணைக்குழு அறிக்கைகள் அனைத்தையும் ஆராய்ந்து தொகுக்கப்பட்ட நவாஸ் ஆணைக்குழுவின் அறிக்கை அண்மையில் எமக்கு கிடைத்தது. இந்த அனைத்து ஆணைக்குழு அறிக்கைகளின் தாய் அறிக்கையாகவும் இது தொடர்பான கடைசி ஆணைக்குழு அறிக்கையும் அதுவாகவே இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இதற்காக மற்றுமோர் ஆணைக்குழுவின் அவசியம் இல்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் பணிமனை மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டும் என்ற அவர்களின் பரிந்துரையை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதை அப்படியே செய்ய வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோர் பணிமனை மற்றும் இழப்பீடுகள் தொடர்பான முழுப் பிரச்னைக்கான தீர்வுகளிலும் மாற்றங்கள் செய்வதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும்.

பொருளாதார நெருக்கடியால், கடந்த இரண்டு ஆண்டுகளாக, எங்களால் அதிகளவு இழப்பீடு தொகையை செலுத்த முடியவில்லை. எனவே அதற்காக பணம் ஒதுக்க வேண்டும். அத்துடன் எது உண்மை, என்ன நடந்தது, நல்லிணக்கத்துக்காக நாம் என்ன செய்கிறோம் என்ற கேள்விக்குறி காணப்படுகிறது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை கொண்டு வருவதற்கு அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. ஆனால், நீதிமன்ற அதிகாரம் குறித்த பிரச்னைகள் அதற்குள் காணப்படுகின்றன.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால் நடைமுறைப்படுத்தப்படும் நீதித்துறை அதிகாரங்கள் எமக்கு இருக்க வேண்டுமா அல்லது அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நீதித்துறை அதிகாரங்களைச் செயல்படுத்தும் தனி நீதிமன்றம் வேண்டுமா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். மேலும் இந்த சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனவே, இது குறித்து அரசாங்கம் முடிவெடுக்க வேண்டும்.

அத்துடன், வடக்கு மாகாணம் அபிவிருத்திக்கான சாத்தியக்கூறுகளை அதிகமாக கொண்டிருக்கிறது. இந்த மாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பெருமளவில் உள்ளது. அதனால் யாழ்ப்பாணத்தை இலங்கையின் முக்கிய வலுசக்தி மையமாக கட்டியெழுப்ப முடியும். வட மாகாணத்தில் இந்த வலுசக்தியை நாம் இதுவரை பயன்படுத்தவில்லை. ஆனாலும் ஜிகாவாட்ஸ் அளவிலான வலுசக்தி இங்கு உள்ளது.

மேலும், நாட்டில் போட்டி, ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம். வடக்கு மாகாணம் அதற்குள் முக்கியமான இடத்தை பிடிக்கிறது. இங்குள்ள விவசாயிகளுக்கு அதற்கான திறன் உள்ளது. இதன் மூலம் வட மாகாண மக்களின் வருமான மட்டத்தை பெருமளவில் மேம்படுத்த முடியும்.

கைத்தொழில்களைப் பொறுத்த வரையில் காங்கேசன்துறையில் முதலாவது முதலீட்டு வலயத்தை அமைப்பது குறித்தும், பின்னர் பரந்தன் மற்றும் மாங்குளத்தில் கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிப்பது குறித்தும் ஆலோசித்து வருகிறோம். மேலும் திருகோணமலையை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவுடன் இணைந்து செயல்படுகின்றோம். வடக்கில் சுற்றுலாத்துறைக்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆராய்ந்து வருகிறோம் - என்றும் கூறினார். (ஐ)

# மதுபானசாலை அனுமதி பத்திரங்களை அதிக விலைக்கு விற்கும் எம். பிக்கள்!

## மதுவரித் திணைக்களம் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 25

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது.

இந்தப் பின்னணியில், அவ்வாறான உண்மைகள் கண்டறியப்படும் நிலையில், மதுபானசாலை அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்தவுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை பெற்று, 5 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளனர் என்று முறைப்பாடுகள் தெரிவிக்கின்றன.

நாட்டில் புதிதாக 478 மதுபானசாலைகளை அமைப்பதற்கு புதிய நிபந்தனைகளின் கீழ் மதுபான உரிமங்களை வழங்குவதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்துக்கு அமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் மதுபானசாலைகளை திறப்பதற்கான அனுமதியை வழங்கும் போதும் உறவினர்களின் பெயரில் உரிமம் பெறுவதற்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முயற்சி செய்ததாக கூறப்படுகிறது.

இந்த விடயங்கள் தொடர்பில் பாராளுமன்ற விசேட குழு கண்டறிவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்படி, இவ்வாறான சம்பவம் பதிவு செய்யப்படும் நிலையில் அல்லது முறைப்பாடு செய்யப்படும் நிலையில், திணைக்களம் உரிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதாக மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

மதுவரித் திணைக்கள கட்டளைச் சட்டத்தின் படி, திணைக்களத்தின் அனுமதி இன்றி மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை விற்பனை செய்யவோ அல்லது வேறு தரப்பினருக்கு வழங்கவோ முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், எந்தவொரு தரப்பினரும் மதுபானசாலை உரிமத்தினை விற்பனைசெய்ய விரும்பினால், அவர்கள் 1.5 கோடி ரூபாயை அரசாங்கத்துக்கு செலுத்துவதன் மூலம் இதனைச் செயற்படுத்த முடியும் என்று மதுவரி திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார். (ஐ)

## தமிழ் பொது வேட்பாளர் ...

இனப்படுகொலை நிகழாமல் இருப்பதற்காக முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையை மையமாகக் கொண்டதாக இருக்க வேண்டுமே ஒழிய ஒஸ்லோ அறிக்கையின் அடிப்படையில் அல்ல என்றும் கூறியுள்ளார்.

ஒஸ்லோ உடன்படிக்கை என்று ஒன்று ஏற்படவில்லை. உள்ளக சுயநிர்ணயத்தின் அடிப்படையில் ஒரு கூட்டாட்சி தீர்வை ஏற்படுத்துவதற்கு புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் எந்தவோர் உடன்பாடும் ஏற்படவில்லை. மாறாக, தமிழ் பேசும் மக்களின் வரலாற்று தாயக பகுதிகளில் உள்ளக சுயநிர்ணய கோட்பாட்டின் அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி தீர்வு தொடர்பாக ஆராய்வதற்கு கட்சிகள் ஒப்புக்கொண்டுள்ளன.

ஒஸ்லோ அறிக்கையின் பின்னர் பல விடயங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக, முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலை ஐ. நாவின் உள்ளக ஆய்வு அறிக்கையின்படி போரின் இறுதிக் கட்டத்தின்போது 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி நடைபெறவுள்ள நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பாராளுமன்ற அமர்வில் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் பொதுத் தமிழ் வேட்பாளர்கள் தொடர்பில் அதன் நிலைப்பாடு குறித்து முடிவெடுக்கப்படும் - என்றும் அவர் விடுத்த விசேட அறிக்கையில் கூறியுள்ளார். (ஐ)

## கண்காணிப்பு...

உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாய சட்டம் (ஐ. சி. சி. பி. ஆர்) ஆகியவற்றின்கீழ் நபர்களை பலவந்தமாக தடுத்துவைத்ததன் ஊடாக இலங்கை அரசாங்கம் மத சுதந்திரத்தை வெகுவாக மட்டுப்படுத்தியது. புத்த பெருமானின் புனித தந்ததாது தொடர்பில் அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்டாரெனக் கூறி 2023 ஜனவரியில் யூ ரியூப் பதிவரான சேபால் அமரசிங்க கைது செய்யப்பட்டார். இதேபோன்று பௌத்த - கிறிஸ்தவ மதங்களை அவமதித்தார் என்று கூறி நகைச்சுவை பேச்சாளரான நடாஷா எதிரிசூரிய 2023 மே மாதம் ஐ.சி.சி.பி.ஆர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை கடந்த ஆண்டு முழுவதும் தொல்பொருள் திணைக்களமானது பௌத்த பிக்குகள் மற்றும் ஏனைய அரச கட்டமைப்புகளுடன் ஒன்றிணைந்து பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்து, இஸ்லாமியர்களுக்கு சொந்தமான காணிகளை ஆக்கிரமித்தது.

2023 மார்ச்சில் பௌத்த பிக்குகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் இணைந்து திருகோணமலையில் புத்தர் சிலையை நிறுவும் முயற்சிகளில் ஈடுபட்டனர். அதற்கு எதிராகப் போராட்டம் நடத்திய தமிழ், முஸ்லிம்களை “சுட்டுத் தள்ளுவோம்” எனக்கூறி அச்சுறுத்தினர். அடுத்ததாக குருந்தூர்மலை ஆலய விவகாரத்தில் 2022ஆம் ஆண்டு நீதிபதி ரி. சரவணராஜாவால் வழங்கப்பட்ட உத்தரவு 2023 செப்ரெம்பரில் தொல்பொருள் திணைக்களத்தால் மீறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உயிரச்சுறுத்தல் எனக் குறிப்பிட்டு பதவியை இராஜினாமா செய்த நீதிபதி சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறினார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் பௌத்த பிக்குகளால் மத சிறுபான்மையினருக்கு எதிராகத் தூண்டப்பட்ட அமைதியின்மை மற்றும் வன்முறைகளைத் தடுப்பதற்கு அரசாங்கம் தவறியிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் மத சுதந்திரத்துடன் தொடர்புடைய விவகாரத்தில் இலங்கையை விசேட கண்காணிப்பு பட்டியலில் சேர்த்தல், பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்குமாறு அல்லது சர்வதேச நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்குமாறு இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்கும்படி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் வலியுறுத்தல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51/1 தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான அழுத்தம் பிரயோகித்தல் ஆகிய நடவடிக்கைகளை அமெரிக்க அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும்.

இதேபோன்று இலங்கையில் தற்போது நிலவும் மத சுதந்திரம் சார்ந்த பிரச்னைகளை கருத்துக்கோரல், சந்திப்புகள், கடிதங்கள் ஊடாகக் கேட்டறிவதற்கு அமெரிக்க காங்கிரஸ் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மலேசியாவிலிருந்து 1608 பேர் நேற்று நாடு திரும்பினார்கள்!

கொழும்பு, மே 25

**மலேசியாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 1,608 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர். இவர்கள் கடந்த மார்ச் 1 ஆம் திகதி முதல் ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நாடு திரும்பியிருந்தனர்.**

இவர்கள் மலேசியாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த நிலையில் இலங்கை தூதரகத்தின் உதவியுடன் நாடு திரும்பியுள்ளனர்.

மலேசிய அரசாங்கத்தின் புலம்பெயர்ந்தோரை திருப்பி அனுப்பும் திட்டத்துடன் இணைந்து இந்த முயற்சி மேற்கொள்ளப்படுவதாக கோலாலம்பூரில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்தது.

இந்தத் திட்டத்தினூடாக ஏற்கனவே ஜனவரி 1 ஆம் திகதி முதல் பெப்ரவரி 28 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 124 இலங்கையர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இதன்படி, மொத்த திருப்பி அனுப்பப்பட்டவர்களின் எண்ணிக்கையை 1,732 ஆகும்.

மலேசிய அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட புலம் பெயர்ந்தோரை திருப்பி அனுப்பும் திட்டம், சட்ட விலக்குகள் மற்றும் நிதி நிவாரணங்களை வழங்குவதன் மூலம் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் தாமாக முன்வந்து சொந்த நாடுகளுக்குத் திரும்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் முதியவர்கள், கர்ப்பவதிகள், பெண்கள், மருத்துவ உதவி தேவைப்படும் நபர்கள், 12 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் உள்ளிட்டவர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டதாக இலங்கை தூதரகம் தெரிவித்தது. (ஐ)

## கார் மீது மரம் வீழ்ந்ததில் மூன்று பேர் படுகாயம்!

கொழும்பு, மே 25

கொழும்பு - சிலாபம் பிரதான வீதியில் கொஸ்வாடிய பிரதேசத்தில் கார் ஒன்றின்மீது மரமொன்று சரிந்து வீழ்ந்ததில் மூவர் காயமடைந்தனர்.

சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த காரின் மீதே மரம் வீழ்ந்துள்ளது. இதன்போது, காரில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மாரவில ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

பலத்த காற்று காரணமாகவே தரம் வீழ்ந்தது. இதனால் சில மணி நேரம் அந்தப் பகுதியில் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. (ஐ)

# வடமராட்சி கிழக்கு சங்கத்துக்கான நிர்வாக தெரிவில் தனியான விதிகள்

## ஏற்றுக்கொள்ளவே முடியாது என்கிறது தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம்!

வடமராட்சி, மே 25

கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகத் தெரிவின் போது பொதுவான விதிகளைப் பின்பற்றும் கூட்டுறவு ஆணையாளர் வடமராட்சி கிழக்கு பகுதிக்கு மட்டும் தனியான விதிகளை நடைமுறைப்படுத்துகிறது. இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க தலைவர் இ. முரளிதரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வடமராட்சி கிழக்கில் மட்டும் பொதுச்சபை பிரதிநிதிகள் அனைவரும் வாக்களிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. ஏனைய நிர்வாகத் தெரிவின்போது கூட்டங்களில் கலந்து கொள்ளும் அனைவரும் வாக்களிக்க முடியும். ஆனால், வடமராட்சி கிழக்கில் அவ்வாறான நடைமுறை பின்பற்றப்படாமலே நிர்வாகத்தெரிவு நடைபெற்றுள்ளது. இது அரசோடு சேர்ந்து இயங்குவோருக்கு சார்பானவர்களை நிர்வாகத்துக்குள் உள்வாங்கும் செயல்பாடாகும்.

கூட்டுறவு திணைக்களத்தின் கீழ் இயங்குகின்ற அனைத்து கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களிலும் பொதுச் சபைக்கு தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் அனைவரும் தமது சமாசங்களுக்கு நிர்வாகம் தெரிவு செய்யப்படும்போது, வாக்களிக்கக்கோரும் சந்தர்ப்பங்களில் அனைத்து பொதுச்சபை உறுப்பினர்களும் வாங்களித்தே நிருவாகம் தெரிவு செய்யப்படுவது வழமையாகும். எனினும், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் மட்டும் சமாசத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பொதுச்சபை உறுப்பினர்களிலிருந்து வாக்களிக்கும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்கள் மட்டும் வாக்களிக்கும் நடைமுறை உள்ளது.

வடக்கில் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தில் மட்டுமே இந்நிலை உள்ளது. இந்தநிலை, மாற்றப்பட்டு பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரும் வாக்களிக்கக்கூடிய நிலைமை ஏற்படுத்தப்பட வேண்டும். இதுதொடர்பாக கூட்டுறவுத்திணைக்ள ஆணையாளர் தலையிட்டு எமக்கான சாதகமான பதிலைத் தரவேண்டும். தவறும் பட்சத்தில் அவர்களுகெதிராக நீதிமன்றத்தில் பொது நலவழக்கின் கீழ் வழக்கு தாக்கல் செய்யவும் பின்னிற்கமாட்டோம் - என்றார். (ஐ-02)

## தெதுரு ஓயா நீர்த்தேக்க 4 வான் கதவுகள் திறப்பு!

கொழும்பு, மே. 25

கடும் மழை காரணமாக தெதுரு ஓயா நீர்த்தேக்கம் நிரம்பியுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன் காரணமாக நீர்த்தேக்கத்தில் 04 வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

தலா 03 அடி கொண்ட 02 வான் கதவுகளும், தலா 02 அடி கொண்ட 02 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. (அ)



## வெசாக் தினத்தில் மக்களுக்கு ஐஸ்கிறீம் வழங்கிய பொலிஸ்!

வடமராட்சி, மே 25

வெசாக் தினத்தில் பருத்தித்துறை நகரில் பொதுமக்களுக்கு ஐஸ்கிறீம் வழங்கினர் பொலிஸார்.

பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தலைமையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சி. டபிள்யூ. எஸ். ஈ. ஜயதிலக பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஐஸ்கிறீமை வழங்கி வைத்தார்.

பெருமளவான சிறுவர்கள் மற்றும் பொது மக்கள் ஐஸ்கிறீமை வாங்கிச் சென்றனர். (ஐ-02)

## மலையகத்தில் கடும் காற்றால் போக்குவரத்து, மின்சார தடை!

ஹற்றன், மே 25

மலையகத்தில் தொடர்ந்து பெய்துவரும் கனமழை, பலத்த காற்றால் பல பகுதிகளில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன், மின் தடையும் ஏற்பட்டுள்ளது.

ஹற்றன் - மஸ்கெலியா பிரதான வீதியின் நோர்வூட் தோட்டப் பகுதியியில் மரம் முறிந்து வீழ்ந்ததில் அந்தப் பகுதியில் பல மணி நேரம் போக்குவருத்துத் தடைப்பட்டது. எனினும், மரம் வெட்டி அகற்றப்பட்டதை அடுத்து போக்குவரத்து சீரானது. எனினும், இந்த வீதியை ஒருவழிப் பாதையாக பயன்படுத்த பொலிஸார் அறிவுறுத்தினர்.

இதேபோன்று, டிக்கோயா ஆதார மருத்துவமனைக்கு அண்மையாகவும் வீதியில் மரம் முறிந்து வீழ்ந்தது. எனவே, சாரதிகள் அவதானமாக செயல்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேநேரம், கடும் காற்றால் மின்கம்பிகள் அறுந்து வீழ்வதால் மின்சாரம் அடிக்கடி தடைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## விகாரைக்கு சென்ற குடும்ப பெண் மாயம்!

கொழும்பு, மே 25

போதி விகாரைக்கு சென்ற குடும்பப் பெண் ஒருவர் காணாமல் போன சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று களுத்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறையை சேர்ந்த தரங்கி நிலுஷா என்ற 25 வயது பெண்ணே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

குறித்த பெண், கடந்த 22ஆம் திகதி உறவினர்களுடன் சேர்ந்து விகாரைக்கு சென்றுள்ளார். அங்கு, தனது 2 வயது குழந்தையை உறவினரிடம் சென்றுவிட்டு மலசலகூடம் சென்று வருவதாகக் கூறிச் சென்றுள்ளார்.

நீண்டநேரமாகியும் அவர் திரும்பவில்லை. சம்பவம் தொடர்பில் பெண்ணின் கணவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வமத வழிபாட்டுடன் புதிய தேயிலை திருவிழா!

கொழும்பு, மே 25

200 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றை கொண்ட தேயிலை தொழில்துறையின் அனைத்து தரப்பினருக்கும் ஆசிர்வாதத்தை பெறும் வருடாந்த புத்தம் புதிய தேயிலை திருவிழா சர்வ மதத் தலங்களிலும் நேற்று நடைபெற்றது.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு மற்றும் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து 12 மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சி முன்னெடுக்கப்பட்டது.

தேயிலை தொழிலுக்கு முன்னோடியாக விளங்கும் ஜேம்ஸ் ரெய்லரை நினைவுகூர்ந்து, தேயிலை தொழிலுக்கு பங்களிக்கும் அனைத்து தரப்பினரையும் ஆசிர்வதித்து வாழ்வதற்கான வலிமையையும் தைரியத்தையும் உறுதியையும் ஊட்டி, 2018ஆம் ஆண்டு முதல் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.



நுவரெலியாவில் இந்த நிகழ்வு நுவரெலியா ஸ்வர்ண கிரி விவேக சேனாசனம், புனித திரித்துவ கத்தோலிக்க தேவாலயம், முத்துமாரியம்மன் ஆலயத்திலும் நடைபெற்றன.

சிங்கள, தமிழ் புத்தாண்டின் பின்னர், முதற்கட்ட தேயிலை மற்றும் புதிதாக அறுவடை செய்யப்பட்ட தேயிலை இலைகள் இதன்போது மதத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.